# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 14 வள்ளுவர் ஆண்டு 2030 ஆடி 26 புதன்கிழமை [11-08-1999] UTHAYAN A Lively National Tamil Daily கதிர்: 221


# அமெ. அரசுக்கு எதிராக புலிகள் மேன்முறையீடு!

## சர்வதேச பயங்கரவாத அமைப்புகள் பட்டியலில் சேர்த்ததை ஆட்சேபித்து

நியூயோர்க், ஒகஸ்ட் 11

அமெரிக்க அரசினால் பிரகடனப்படுத்தப்பட்ட பயங்கரவாத அமைப்புகளின் பட்டியலில் தமது இயக்கத்தையும் சேர்த்துக் கொண்டதை ஆட்சேபித்து தமிழீழ விடுதலைப் புலிகளால் தாக்கல் செய்யப்பட்ட மனுவை அமெரிக்க மாநில நீதிமன்றம் ஒன்று நிராகரித்ததை அடுத்து —

அந்தத் திர்ப்புக்கு எதிராக கொலம்பியா மாநிலத்தில் உள்ள மேன்முறையீட்டு நீதிமன்றம் ஒன்றில் நேற்றுத் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு மேன்முறையீடு செய்துள்ளது.

பயங்கரவாத அமைப்புக்களின் பட்டியலில் விடுதலைப் புலிகளையும் சேர்த்து அமெரிக்க ராஜாங்க அமைச்சு கடந்த ஆண்டு வெளியிட்ட பிரகடனத்தை வாபஸ்பெற உத்தரவிடவேண்டும் என்று கோரி விடுதலைப் புலிகள் முன்னர் மனு ஒன்றைத் தாக்கல் செய்திருந்தனர்.

இந்த மனுவை சில காரணங்களைக் காட்டி மேன்முறையீட்டு நீதிமன்றம் நிராகரித்து தீர்ப்பளித்திருந்தது.

இந்தத் தீர்ப்பை மறுபரிசீலனை செய்து மறுவிசாரணை ஒன்றை நடத்துமாறு கோரியே நேற்று மனுஒன்றை மீண்டும் புலிகள் தாக்கல் செய்துள்ளனர்.

அமெரிக்காவின் முன்னாள் சட்டமா அதிபர் ராம் சேக்கிளாக், சட்டத்தரணி லோறன்ஸ் சிலிங் ஆகியோர் புலிகளின் சார்பில் இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளனர்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## மருதானையில் 25 தமிழர் கைது!

கொழும்பு, ஒக. 11

மருதானைப் பகுதி நேற்றுக் காலை பொலீஸாராலும், படையினராலும் சுற்றி வளைக்கப்பட்டு தேடுதல் இடம்பெற்றது

அந்தப் பகுதியில் தமிழர் வசிக்கும் வீடுகளில் மேற்கொள்ளப்பட்ட இந்தத் தேடுதலில் 25 தமிழர் கைது செய்யப்பட்டு பொலீஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். (உ-3)

### மாங்குளம் பாதை ஊடாக
## 20 லொறிகளில் உணவு இன்று வன்னிப் பகுதிக்கு

வவுனியா, ஒக. 11

இராணுவக்கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதிக்கான தரை வழிப் பாதை திறக்கப்பட்டதைத் தொடர்ந்து நேற்றைய தினம் இரண்டாவது நாளாக 504 பொது மக்கள் தமது கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் வந்து சேர்ந்ததாக விடுதலைப் புலிகள் வன்னியில் நேற்று அறிவித்துள்ளனர்.

இன்று காலை வடபிராந்தியப் பார ஊர்திகள் சங்கத்தைச் சேர்ந்த 20 லொறிகள் மாங்குளம் சென்று அத்தியாவசிய உணவுப் பொருள்களை ஏற்றிக்கொண்டு வன்னிக்குத் திரும்பும் எனவும் —

உணவுப் பொருள்களுடன் வவுனியாவில் இருந்து லொறிகள் மாங்குளத்துக்கு வருவது

(10 ஆம் பக்கம் பார்க்க)

## கைதடி இராணுவமுகாம் அருகே திங்களன்று குண்டு வெடிப்பு

யாழ்ப்பாணம், ஒக. 11

கைதடி மத்தி இராணுவ முகாம் பகுதியில் நேற்று முன்தினம் மாலை 5 மணியளவில் குண்டு ஒன்று வெடித்தது.

குண்டுவெடிப்பை அடுத்து படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். சேதம் ஏதும் ஏற்படவில்லை.

பின்னர் படையினர் அந்தப் பகுதியில் தேடுதல் நடத்தி

(9 ஆம் பக்கம் பார்க்க)

### தலை வெட்டிக் கொலை:
## புளொட் சிரேஷ்ட உறுப்பினர் நீதிமன்றத்தில் ஆஜர்

நெல்லியடி, ஒக. 11

கரவெட்டிப்பகுதியில் கடந்த மார்ச் மாதம் 27 ஆம் திகதி இளைஞர் ஒருவர் கழுத்து வெட்டிக் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் புளொட் அமைப்பின் சிரேஷ்ட உறுப்பினரான ஜெயாமாஸ்டர் என அழைக்கப்படும் சபாபதிப் பிள்ளை ஜெயச்சந்திரன் கைது செய்யப்பட்டுள்ளார்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## நல்லூரில் தேடுதல்

யாழ்ப்பாணம், ஒக. 11

நல்லூர் சங்கிலியன்தோப்பு மற்றும் முத்திரைச் சந்தை, கல்வியங்காடு, நாயன்மார் கட்டுப் பகுதிகள் படையினரால் நேற்றுக் காலை சுற்றி வளைக்கப்பட்டு பலத்த தேடுதலுக்கு உட்படுத்தப்பட்டன.

வீடு வீடாகச் சென்ற இராணுவத்தினரும். பொலீஸா

[10 ஆம் பக்கம் பார்க்க]

## மட்டுநகர் சுற்றிவளைப்பு

மட்டக்களப்பு, ஒக. 11

மட்டக்களப்பு நகர் பொதுச் சந்தைப் பிரதேசம் நேற்று நண்பகல் பொலீஸாரால் சுற்றி வளைக்கப்பட்டுத் தேடுதல் இடம் பெற்றது.

விடுதலைப் புலிகளின் தற்கொலைப் படையினர் நகருக்குள் ஊடுருவியிருப்பதாகக்

[10 ஆம் பக்கம் பார்க்க]

## விமானப் பயணிகளுக்கு!

யாழ்ப்பாணம் ஒக. 11

கொழும்பில் இருந்து விமானம்மூலம் யாழ்ப்பாணம் வருவோர் மீளத்திரும்பும் திகதியை மாற்ற விரும்பினால் டிக்கெட்டில் குறிப்பிடப்படும் திகதிக்கு 72 மணி நேரத்துக்கு முன்னர் யாழ். சிவில் நிர்வாக அலுவலகத்தில் சமுகம் தந்து திகதியை மாற்ற வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அவ்வாறு செய்யாத பட்சத்தில் குறிப்பிட்ட திகதியில் கட்டாயம் பயணம் செய்ய வேண்டும் என்று யாழ். சிவில் நிர்வாக அலுவலகம் அறிவித்துள்ளது. (உ-3)

## வன்னிக்கு கூடுதல் உணவு அனுப்பக் கோரி பேரணி!
### இன்று தலைநகர் கொழும்பில்

கொழும்பு ஒக. 11

யுத்தத்தை உடன்நிறுத்தி பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டும் என்றும் —

வன்னியில் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிக்குக் கூடுதலான உணவு மற்றும் மருந்துப் பொருள்கள் அனுப்பப்பட வேண்டும் என்றும் —

கோரி புதிய இடதுசாரி முன்னணி கொழும்பு ரயில் நிலையம் முன்பாக இன்று பிற்பகல் 4 00 மணிக்கு ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடத்தவிருக்கின்றது

புதிய இடதுசாரி முன்னணிப் பிரமுகரான விக்கிரமபாகு கருணரத்ன தலைமையில் இடம்பெறும் இந்தப்

[10 ஆம் பக்கம் பார்க்க]

## ஜெனீவாவில் திங்களன்று ஈழத்தமிழர் ஆதரவுப் பேரணி!

ஜெனிவா, ஒக. 11

தமிழ் மக்கள் மீதான இன அழிப்பு நடவடிக்கைகளை ஸ்ரீலங்கா அரசு உடனடியாக நிறுத்தவேண்டும் எனக்கோரி சுவிட்ஸர்லாந்தின் ஜெனீவா நகரில் நேற்று முன்தினம் பேரணி ஒன்று நடத்தப்பட்டுள்ளது.

புலம்பெயர்ந்து சுவிஸில் வாழும் ஈழத்தமிழ் மக்கள் ஒன்றிணைந்து இந்தப் பேரணியை ஒழுங்கு செய்திருந்தனர்.

ஆயிரக்கணக்கானோர்

[10 ஆம் பக்கம் பார்க்க]

### இனப்பிரச்சினைக்குத் தீர்வு
## அரசு - ஐ. தே. க. தலைவர்கள் இன்று கூடி ஆராய்வர்

கொழும்பு, ஒக. 11

இனப்பிரச்சினைத்தீர்வுக்கு அரசு முன்வைத்துள்ள தீர்வுத்திட்டம் தொடர்பாக அரசு மற்றும் ஐ. தே. க. தரப்புப் பிரமுகர்கள் இன்று மீண்டும் கூடி ஆராயவிருக்கின்றனர்.

பண்டாரநாயக்க சர்வதேச மண்டபத்தில் நடைபெறும் இந்தச் சந்திப்பை வர்த்தக சங்க சம்மேளனம் ஏற்பாடு செய்துள்ளது.

இந்தச் சந்திப்பில் அரசு சார்பில் அமைச்சர்களான ஜி எல். பீரிஸ், அஷ்ரப் மற்றும் விக்னராஜா ஆகியோரும் ஐ. தே. க. சார்பில் ஏ. சி. எஸ். ஹமிட், சுவாமிநாதன், றொனி டி. மெல் ஆகியோரும் பங்குபற்றுவர். (உ-3)

### வாகரையில் இடம்பெற்ற
## தற்கொலைத் தாக்குதல் குறித்து உயர்மட்ட விசாரணை ஆரம்பம்

மட்டக்களப்பு ஒக. 11

மட்டக்களப்பு வாகரை இராணுவ முகாம் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தற்கொலைத் தாக்குதல் சம்பவம் தொடர்பாக உயர்மட்ட விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

உயர் பாதுகாப்பு வலயத்துக்குள் தற்கொலைக்குண்டுதாரி எவ்வாறு நுழைந்தார் என்பது தொடர்பாக படை அதிகாரிகள் மற்றும் பொது மக்களிடம் வாக்குமூலங்கள் பெறப்பட்டன.

(10 ஆம் பககம் பார்க்க)

## இன்று மாலை சூரிய கிரகணம்

கொழும்பு, ஒக. 11

இன்று மாலை 5. 52 மணிக்கு சூரியகிரகணம்இடம் பெறும் என் வானிலை அவதான நிலையம் அறிவித்துள்ளது.

இந்த நூற்றாண்டின் இறுதிச் சூரிய கிரகணமாக இது அமையும். இலங்கையின் ஒரு பகுதியில் மாலை 6. 47 மணிக்கு இச்சூரிய கிரகணம் தெளிவாகத் தென்படும் என்றும் —

]10 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# ஐ. நா. அபிவிருத்தித் திட்ட ஏற்பாட்டில் தீவகத்தில் சுயதொழில்வாய்ப்பு கடன்

யாழ்ப்பாணம், ஒக. 11

ஆஸ்திரேலியா வழங்கியுள்ள நிதி உதவியுடன் ஐ. நா. அபிவிருத்தித் திட்ட அமைப்பின் மேற்பார்வையில் தீவுப்பகுதியில் உள்ள மக்களுக்கு வியாபாரம், சிறுகைத்தொழில், விவசாயம் மற்றும் சுயதொழில் முயற்சி ஆகியவற்றுக்கு கடனுதவி வழங்கப்படவுள்ளது.

இந்தக் கடன்திட்டத்துக்கு அறுபது லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

காரைநகர், ஊர்காவற்றுறை, நெடுந்தீவு, வேலணை, புங்குடுதீவு, நயினாதீவு போன்ற இடங்களிலுள்ள கிராமிய வங்கிகளினூடாக இந்தக் கடன் திட்டம் செயற்படுத்தப்படவுள்ளது.

கடன் பெறுபவர்களிடம் இருந்து 12 வீத வட்டியை பிரஸ்தாப வங்கிகள் அறவிடும்.

இந்த வருட இறுதிக்குள் இந்தக் கடனுதவிகள் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தெல்லிப்பழையில் மக்கள் மீளக் குடியமர்ந்த பிரதேசத்தில் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட இதே போன்ற கடனுதவித் திட்டம் வெற்றியளித்ததைத் தொடர்ந்தே தீவுப்பகுதியிலும் இந்தக் கடனுதவித் திட்டம் அறிமுகம் செய்யப்படுகின்றது என்றும் அவர் தெரிவித்தார். (உ-9)

# வெள்ளி விழாவையொட்டி பல்கலையில் கண்காட்சி

யாழ்ப்பாணம், ஒக. 11

யாழ். பல்கலைக்கழகத்தின் வெள்ளி விழாவை ஒட்டி ஒக்ரோபர் 18,19,20 ஆம் திகதிகளில் கண்காட்சி ஒன்று நடத்தப்படவுள்ளது.

விஞ்ஞானம், மருத்துவம், விவசாயம், கலை, சித்தமருத்துவம், நுண்கலைகள் போன்றவற்றை உள்ளடக்கி மிகப் பிரமாண்டமான முறையில் இந்தக் கண்காட்சி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

மாணவர்கள் மட்டுமல்ல பெரியோருக்கும் பயன்படும் வகையில் வளங்களும் வாழ்க்கையும் என்ற தொனிப்பொருளை மையமாகக் கொண்டு இந்தக் கண்காட்சி அமையவுள்ளதாக யாழ் பல்கலைக்கழக விஞ்ஞான பீடாதிபதியும், தற்போதைய பதில் துணைவேந்தருமான பேராசிரியர் வீ. கே. கணேசலிங்கம் உதயனுக்குத் தெரிவித்தார்.

வெள்ளி விழா நிகழ்வுகளில் பட்டமளிப்பு விழா, கலை நிகழ்ச்சிகள், சீமாட்டி லீலாவதி இராமநாதன் நினைவுச் சொற்பொழிவு, சேர். பொன் இராமநாதன் நினைவுச் சொற்பொழிவு போன்றவையும் இடம்பெறவுள்ளன.

கடந்த காலத்தில் யாழ். பல்கலைக்கழகம் ஆற்றிய கல்விச் சேவை மற்றும் ஆராய்ச்சிகள் தொடர்பாக பிரமுகர்கள், கல்விமான்கள் மட்டத்தில் கருத்தரங்குகள் நடத்தப்பட்டு அவை புத்தக வடிவில் வெளியிடப்படவுள்ளது.

பல்கலைக்கழக வெள்ளி விழா நிகழ்வுகளை இலங்கை வானொலி யாழ். சேவையினால் நேரடியாகஒலிபரப்பு செய்வதற்கும் யாழ். சேவை அதிகாரிகளினால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. (இ-5-ரி)

# மீன்பிடியியல் டிப்ளோமா நெறிக்கு மேலும் 10 பேர்

யாழ்ப்பாணம், ஒக. 11

யாழ். பல்கலைக்கழக கடல்வள அபிவிருத்தி நிலையத்தினால் நடத்தப்படும் மீன்பிடியியல் டிப்ளோமா கற்கை நெறிக்கு மேலும் பத்து மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளனர்.

இந்த கற்கைநெறிக்கு நூற்றுக்கணக்கான மாணவர்கள் விண்ணப்பித்தபோதும் 50 மாணவர்களே தெரிவு செய்யப்பட்டனர்.

தெரிவுசெய்யப்பட்ட 50 மாணவர்களில் 40 மாணவர்களே தற்பொழுது மேற்படி கற்கை நெறிக்கு சமுகமளித்துள்ளனர்.

தெரிவுசெய்யப்பட்டவர்களில் சமுகமளிக்காத மாணவர்களின் இடத்துக்கே புதிதாக பத்து மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளனர்.

ஏற்கனவே விண்ணப்பித்தவர்களில் இருந்து இந்த பத்து மாணவர்களும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

அவர்களின் விவரம் வருமாறு;-

கே. முகுந்தன் [சுதுமலை], எஸ். பாலமுரளி[கரவெட்டி). கே. முரளிதரன் [உரும்பிராய்], எஸ். சிறிகிருஷ்ணன் [நெல்லியடி]. ஐ.சி. அருணன் [வட்டுக்கோட்டை], செல்வி வாணி கிருஷ்ணமூர்த்தி [அல்வாய்], வி. சிவாதரன் [குப்பிளான்]. எஸ். பானுகோபன் ]நவக்கிரி], எஸ். ரூபேந்திரன் [கரணவாய்[, வி. தற்பரன் [மீசாலை] [இ-5-ரி]

# மீளக்குடியமர்வு நிவாரணம் இன்னும் இல்லை

தென்மராட்சி, ஒக. 11

வன்னியிலிருந்து தமது சொந்த இருப்பிடங்களுக்கு திரும்பிய தென்மராட்சியைச் சேர்ந்த பலருக்கு இதுவரை மீளக்குடியமர்வுக் கொடுப்பனவு வழங்கப்படவில்லை என தெரிவிக்கப்பட்டது.

இந்தக் கொடுப்பனவைப் பெறுவதற்கானவவுச்சர்களில் முத்திரை ஒட்டி கையொப்பமிட்டு ஒரு வருடத்துக்கு மேலாகியும் இதுவரைகொடுப்பனவு வழங்கப்படவில்லை என வன்னியிலிருந்து திரும்பிய பலர் தெரிவித்தனர்.

இதேவேளை இவர்களில் சிலருக்கு வீடு மற்றும் உடைமைகள் பாதிப்புக்கான நட்டஈட்டுத் தொகையின் முதற் கட்டக் கொடுப்பனவு ரூபா 5 ஆயிரம் கிடைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (இ-117)

# இளம் குடும்பஸ்தர் கைது

வன்னியில் இருந்து குடாக் கடல் ஊடாக வந்து சிநோர் இடைத்தங்கல் முகாமில் தங்கியிருந்த இரு இளம் குடும்பஸ்தர்கள் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களை விசாரணை செய்த படையினர் பின்னர் அவர்களது மனைவிமாரையும் விசாரணைக்கு உட்படுத்தியுள்ளதாகக் கூறப்பட்டது. (உ-3-86)

# பனம் பொருள் கட்டட வேலை ஆரம்பிப்பதில் தாமதம்

யாழ்ப்பாணம், ஒக. 11

பனை அபிவிருத்திச் சபையினால் கொழும்பிலிருந்து 6 மாதங்களுக்குமுன்கொண்டு வரப்பட்ட 45 லட்சம் ரூபா பெறுமதியான இயந்திர சாதனங்களின் ஒரு தொகுதி பருத்தித்துறையில் அமைக்கப்படவுள்ள பனம் பொருள் பல்தொழில் தொகுப்பு கட்டட தொகுதிக்கென ஒதுக்கி வைக்கப்பட்டுள்ள போதும்இதனை ஆரம்பிப்பதற்கு இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலம் பனம் தொழிலுடன் தொடர்புடைய பலருக்கு வேலைவாய்ப்பு அளிக்க முடியும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

பருத்தித்துறை பிரதேச செயலக ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தில் இந்தத் திட்டம் குறித்து ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டு வெளிநாட்டு நிறுவனங்களின் உதவியுடன் இதனை நடைமுறைப்படுத்துவதற்கு யாழ். செயலகத்துக்கு திட்ட அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. (இ-5)

# கொழும்பில் இன்று பேரணி

கொழும்பு, ஒக. 11

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்றைக் காணும் விடயத்தில் அரசாங்கமும், எதிர்க்கட்சியும் ஒன்றுபட வேண்டுமெனக் கோரி இன்று கொழும்பில் பேரணி ஒன்று நடத்தப்படவுள்ளது.

''எமது குரல்'' எனப்படும் அமைப்பின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள இந்தப் பேரணி கொழும்பு விகாரமாதேவி பூங்காவுக்கு அண்மையில் உள்ள மகாவலி நிலையத்தில் இருந்து ஆரம்பமாகி லிப்டன் சதுக்கத்தில்நடைபெறும் பொதுக் கூட்டத்துடன் நிறைவுறும்.

பேரணியின் முடிவில் சமாதானத்தை வலியுறுத்தும் மகஜர்கள் ஜனாதிபதிக்கும், எதிர்க்கட்சித் தலைவருக்கும் அனுப்பிவைக்கப்படும். (உ-7)


உ

சுன்னாகம்

ஸ்ரீ கதிரமலைச்சிவன் தேவஸ்தான

ஆடிப்பூர மஹோற்சவம்

ஸ்ரீ சுவர்ணாம்பிகையின் கொடியேற்றம் 4-8-99 இல் ஆரம்பமாகி இனிதே நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது

★ இன்று (11 - 08 - 99) மாலை 6.00 மணிக்கு மின் தீபங்களால் அலங்கரிக்கப்பட்ட அழகிய சப்பறத்தில் அம்பாள் இடப வாகனத்தில் காட்சி தருவாள்.

★ நாளை (12 - 08 - 99) வியாழக்கிழமை மாலை 6. 00 மணிக்கு மின் தீபங்களால் அலங்கரிக்கப்பட்ட அழகிய சித்திரத்தேரில் பவனி வருவார்.

★ 13 - 08 - 99 வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு தீர்த்த உற்சவமும் மாலை 6. 00 மணிக்கு கொடி இறக்க வைபவத்துடன் மஹோற்சவம் நிறைவுபெறும்.

சுபம்.

(68124) — ஆலய பரிபாலன சபை

UNOPS - JRRP

குடிசார் எந்திரவியலாளர்/ கணிய அளவீட்டாளர்

உடன் தேவை

யாழ். மாவட்டத்தில் சுகாதார புனரமைப்பு வேலைகளில் எமது குழுவில் பணிபுரிவதற்கு மேற்கூறிய பதவிக்குத் தகைமையுடைய பெண்கள் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பங்களை 125, கோயில் வீதியில் அமைந்திருக்கும் எங்கள் காரியாலயத்தில் உடன் ஒப்படைக்கவும்.

- திட்ட முகாமையாளர்

(சி/8490)

லிபேட்டி தியேட்டர்

அச்சுவேலி.

இன்று

பிரபு, ராதிகா, முரளி, சித்திரா, கவுண்டமணி, செந்தில்

நடித்த

நினைவுச் சின்னம்

நேரம்; 10-30, 2-30

(68097)

ராஜா

யாழ்ப்பாணம்

அர்ஜுன் - ரஞ்சிதா மற்றும் பலர் நடித்த

ஜெய்ஹிந்த்

10-30, 2-30

13 - 08 - 99 முதல்

ஜீன்ஸ்

(சி/8420)

நாகம்ஸ்

சுன்னாகம்

கார்த்திக், நக்மா, கவுண்டமணி, ஜெமினிகணேசன் மணிவண்ணன் நடித்த

மேட்டுக்குடி

காட்சிகள் 11.00, 2.30

[ புதிய நேரம் ]

[68125]


## மரண அறிவித்தல்

### சரவணை வேலுப்பிள்ளை

(ஓய்வுபெற்ற யாழ். கச்சேரி உத்தியோகத்தர்)

சுன்னாகம் மயிலணி வைரவர் கோயிலடியைச் சேர்ந்த சரவணை வேலுப்பிள்ளை 10- 08- 99 இல் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (10-08-99) நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்

மயிலணி, சுன்னாகம். (68121)


யா/சேர் வைத்தியலிங்கம் துரைசுவாமி ம. ம. வி., வேலணை

பழைய மாணவர் சங்கம்

வருடாந்தப் பொதுக்கூட்டம்

மேற்படி கூட்டம் 11 - 09 - 99 சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறும்,

அங்கத்துவத்தை உறுதிப்படுத்தல்

இடப்பெயர்வுகள் காரணமாக அங்கத்தவர் விவரப் பட்டியல் முழுமையாகப் பெறமுடியாதுள்ளது. எனவே பழைய மாணவர்கள் யாவரையும் கீழ்க்குறிப்பிட்டவாறு மாதிரி விண்ணப்பத்தைப்பூர்த்தி செய்து உங்கள் அங்கத்துவத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

1) முழுப்பெயர்
2) சொந்த முகவரி
3) தற்போதைய முகவரி
4) அடையாள அட்டை இலக்கம்
5) கல்லூரியில் படித்த வருடங்கள்
6) அங்கத்தவர் சந்தா ரூபா நூறு

திகதி. ஒப்பம்.

பதிவுத் தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ அல்லது பொருளாளர் திரு. சி. த. மகாலிங்கம் அவர்களிடமோ சந்தாவைச் செலுத்தி 01-09-99 க்கு முன்னர் விண்ணப்பித்து உறுதிப்படுத்திக் கொள்ளுக.

நன்றி.

ஜே. எக்ஸ். செல்வநாயகம்
செயலாளர்

ப. மா. சங்கம், சேர். வை. து. ம. ம. வி., வேலணை.

(68126)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# வெற்றியில் வாஜ்பாய் நம்பிக்கை!

புதுடில்லி, ஒக.11

தற்போது பதவியில் உள்ள பாரதிய ஜனதா ஆட்சி நீடிக்கவே இந்திய மக்கள் தமது வாக்கை அளிப்பார்கள் என்று இந்தியப் பிரதமர் வாஜ்பாய் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

புதுடில்லியில் செய்தியாளர் மத்தியில் பேசுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்,

அவர் மேலும் தெரிவித்ததாவது:—

இம்முறை தேர்தலில் தொங்கு நாடாளுமன்றம் அமைய வாய்ப்பில்லை. மக்கள் தமது வாக்குகளை முறையாகப் பாவித்துத் தெளிவான தீர்ப்பை வழங்குவார்கள்.

அடிக்கடி தேர்தல் இடம் பெறுவதால் சலித்துப் போயுள்ள மக்கள், நிதானமாக வாக்களித்து தற்போதைய அரசை நீடிக்கச் செய்வார்கள்.

மக்களின் தீர்ப்பை மதித்து கூட்டணியில் அங்கம் வகிக்கும் கட்சிகள் செயற்பட வேண்டும். இப்படி அவர் கூறினார்

[இ-3]

## துருக்கியில் குண்டு வெடிப்பு

அங்காரா ஒக. 11

துருக்கியில் ஆளும் கட்சியின் தலைமையகத்தில் குண்டு ஒன்று வெடித்ததில் அங்கு உடைமைச் சேதம் ஏற்பட்டது.

கடந்த ஞாயிறு முதல் அங்கு பல இடங்களில் குண்டுகள் வெடித்ததால் சேதங்கள் ஏற்பட்டுள்ளன.

(இ-3)

## தலிபான் படைகளுக்கு அமெரிக்க யுத்த விமானம்

இஸ்லாமபாத், ஒக. 11

ஆப்கானிஸ்தானில் எதிரணிப் படையினரின் நிலைகள் மீது தாக்குதல் நடத்த நவீன விமானங்களை அமெரிக்கா பாகிஸ்தானுக்கு அனுப்பியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. பாகிஸ்தான் இவற்றை தலிபான்படைக்கும் வழங்கும்.

ஆப்கானில் ஆளும் தலிபான் படையணிக்கு ஆதரவாக பாகிஸ்தான் செயற்பட்டு வருவது தெரிந்ததே.

தலிபானுக்கு எதிரான எதிரணிப் படைகளுக்கு ரஷ்யா, ஈரான் போன்ற நாடுகள் ஆதரவளித்து வருகின்றன.

தலிபானுக்கு உதவும் வகையில் விசேட படை அதிகாரிகளுடன்விமானங்களை அமெரிக்கா பாகிஸ்தானுக்கு அனுப்பியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த தகவல்களை அமெரிக்க வெள்ளைமாளிகைமறுத்துள்ளது.

(இ-3)

## ஜனதா தள் 2 அணிகளுக்கும் தனிச் சின்னங்கள்

ஜனதா தள் கட்சியின் இரு அணிகளுக்கும் தேர்தல் சின்னம் அறிவிக்கப்பட்டுள்ளது.

தேவகௌடா தலைமையிலான ஜனதா தள் மதச்சார்பின்மை ஜனதாதள் என அழைக்கப்படும் அதற்கு தேர்தல் சின்னமாக விவசாயியும் உழவு இயந்திரமும் ஒதுக்கப்பட்டுள்ளது.

சரத்யாதவ் தலைமையிலான ஜனதாதள் ஐக்கிய ஜனதா

உலக அரங்கில்

தள் என அழைக்கப்படும். அதன் தேர்தல் சின்னம் அம்பு இதுதொடர்பான அறிக்கையை தேர்தல் ஆணையகம் நேற்று முன்தினம் அறிவித்துள்ளது.

இரு அணிகளுமே தமக்கு ஜனதாதள் சின்னமான சக்கரம் சின்னத்தை ஒதுக்க வேண்டும் என தேர்தல் ஆணையாளரிடம் தெரிவித்திருந்ததை அடுத்தே தேர்தல் ஆணையகம், இரு அணிகளுக்கும் வெவ்வேறு சின்னங்களை ஒதுக்கியுள்ளது.

(இ-க)

### பா. ம. க. - ராஜீவ் காங்கிரஸ்

## நெருக்கடி நிலை நீடிப்பு; தொகுதிப் பங்கீட்டில் இழுபறி

சென்னை, ஒக. 11

தமிழ்நாட்டில் பாட்டாளி மக்கள் கட்சிக்கும், தமிழக ராஜீவ் காங்கிரஸுக்கும் இடையில் தொகுதிப் பங்கீடு விடயத்தில் உடன்பாடு ஏற்படாத நிலை நீடிக்கின்றது.

பாரதிய ஜனதா — தி. மு. க. கூட்டணியில் அங்கம் வகிக்கும் இந்த இரு கட்சிகளுக்கும் 9 தொகுதிகள் வழங்கப்பட்டிருந்தன.

வாழப்பாடி இராமமூர்த்தி தலைமையிலான ராஜீவ் காங்கிரஸ் தமக்குசேலம், ராசிபுரம் ஆகிய இரு தொகுதிகளையும் தரும்படி கோரி அத் தொகுதிகளுக்கு வேட்பாளர்களையும் அறிவித்திருந்தது.

அதேநேரம்—ராஜீவ் காங்கிரஸ் கட்சிக்கு ஒரு தொகுதியே. சேலத்தை மட்டுமே— வழங்க முடியும் என்று தெரிவித்துள்ள பாட்டாளி மக்கள் கட்சிராசிபுரம் தொகுதிக்கு வேட்பாளரையும் நியமித்துள்ளது.

இருகட்சிகளுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையை முடிவுக்குக் கொண்டுவர தி. மு. க. முயற்சி எடுத்துள்ளது. (இ-3)

## சேர்பிய பகுதிக்குள் பேரணி நடத்த முயன்ற அல்பேனியர்

## பிரெஞ்சுப்படை தடுத்தது

பிரிஸ்ரீனா, ஒக. 11

கொசோவோவில் மொட் செபிக்கா என்ற சேர்பியரின் நகருக்குள் ஊடுருவ முயன்ற அல்பேனியர்களை பிரெஞ்சு அமைதிகாக்கும் படைதடுத்து நிறுத்தியுள்ளது.

சேர்பியர்களும், அல்பேனியர்களும் வசிக்கும் நகரங்களைப் பிரிக்கும் இதாம் பாலத்தில் கூடிய ஆயிரக் கணக்கான அல்பேனியர்கள் சேர்பியர்களின் பிரதேசத்துக்குள் பேரணி நடத்த முனைந்தனர்.

பிரெஞ்சு அமைதி காக்கும் படையினர் அவர்களை மறித்ததை அடுத்து அல்பேனியர்கள் கற்கள் கொண்டு சேர்பியர்களைத் தாக்கினர்.

இதில் சில சேர்பியர்கள் காயம் அடைந்தனர். (இ-3)

## தி.மு. கழகம் -- ம.தி.மு.க. முறுகல் நிலை தீர்ந்தது

### தொகுதி ஒதுக்கீட்டில் இணக்கம்

சென்னை, ஒக. 11

தி.மு.க.வுக்கும் ம. தி. மு. காவுக்கும் இடையே தேர்தல் உடன்பாடு ஏற்பட்டு விட்டது.

சிவகாசி, திண்டிவனம், பழனி, திருச்செங்கோடு, பொள்ளாச்சி தொகுதிகளில் ம. தி. மு. க போட்டியிட அனுமதிக்கப்பட்டுள்ளது.

தி. மு. க. கூட்டணியில் இடம்பெற்றுள்ள ம தி மு கவுக்கு எந்தெந்தத் தொகுதிகளை ஒதுக்குவது என்பதிலேயே இதுவரை சிக்கல் ஏற்பட்டிருந்தது.

ம. தி மு. கவுக்கு 5 இடங்கள் ஒதுக்கப்பட்டன. அதில் கடந்த தேர்தலில் அந்தக்கட்சி வெற்றி பெற்ற சிவகாசி, திண்டிவனம், பழனி ஆகிய மூன்று தொகுதிகளை ஒதுக்க தி. மு. க ஒப்புக்கொண்டது ஆனால் எஞ்சியுள்ள இரண்டு தொகுதிகளை ஒதுக்குவதில் தான் சிக்கல் ஏற்பட்டிருந்தது

தஞ்சை, திருச்செங்கோடு, திருநெல்வேலி, திருச்செந்தூர் ஆகிய நான்கு தொகுதிகளில் ஏதாவது இரண்டு தொகுதிகளை ஒதுக்குமாறு ம. தி மு க கோரியிருந்தது

பொள்ளாச்சி, கோபிச்செட்டிபாளையம், கரூர் ஆகிய தொகுதிகளில் இரண்டைக் கொடுக்கவே தி மு க முன்வந்தது. இதனால் இரு கட்சிகளுக்கும் இடையே முறுகல் நிலை ஏற்பட்டது.

தற்போது சிவகாசி, திண்டிவனம் பழனி, திருச்செங்கோடு, பொள்ளாச்சி, ஆகிய தொகுதிகள் ம. தி. மு. கவுக்கு ஒதுக்கப்பட்டதை அடுத்து முறுகல் நிலை நீங்கியுள்ளது.

]இ-க-8[

## பாகிஸ்தானில் உள்ள அமெரிக்க நிறுவனங்களுக்கு பலத்த பாதுகாப்பு

### தீவிரவாதிகள் தாக்கலாம் என அச்சம்

இஸ்லாமபாத், ஒக. 10

பாகிஸ்தானில் உள்ள அமெரிக்க சார்பு நிறுவனங்கள் மீது தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தலாம் என்ற புலனாய்வுத் தகவலை அடுத்து அவற்றுக்குப் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அமெரிக்கத் தூதரகம், அமெரிக்கர்களின் குடியிருப்புக்கள், அமெரிக்க நிலையங்கள் ஆகியவற்றை இலக்கு வைத்து தாக்குதல் நடத்த இஸ்லாமிய தீவிரவாதிகள் திட்டமிட்டுள்ளனர்.

ஜம்மு - காஷ்மீரில் இருந்து பாகிஸ்தான் ஊடுருவல்காரர்களை விலக்குமாறு அமெரிக்கா பாகிஸ்தானுக்கு நெருக்குதல் கொடுத்தமைக்காகஅமெரிக்காவுக்கு எதிராக பழிவாங்கும் செயலில் ஈடுபட அந்தத் தீவிரவாதிகள் முயற்சிப்பதாகக் கூறப்படுகின்றது

இத்தகைய தாக்குதல் எச்சரிக்கையை அடுத்து விசேட கொமாண்டோப் படைகள் அமெரிக்க சார்பு அலுவலகங்களில் 24 மணி நேரமும் விழிப்பாக இருக்கப் பணிக்கப்பட்டுள்ளன

(இ-3)

## பின்லேடனுடன் சந்திப்பு

இஸ்லாமபாத், ஒக. 11

ஒஷாமா பின்லேடனை ஆப்கானிஸ்தானில் தாம் சந்தித்ததாக பாகிஸ்தான் கிளர்ச்சி இயக்கம் ஒன்று அறிவித்துள்ளது.

கடும் பாதுகாப்புக்கு மத்தியிலும் அவரைச் சந்தித்ததாகவும் அந்த இயக்கம் தெரிவித்துள்ளது. (இ-க)

## மரணப் படுக்கையில் றீகன்

வாஷிங்ரன், ஒக 11

அமெரிக்காவின் முன்னாள் அதிபர் றொனால்ட் றீகன் எந்த வேளையிலும் மரணத்தைத் தழுவலாம என அமெரிக்க வானொலி தெரிவிக்கின்றது.

88 வயதான றீகன் அல்ஜீமிய நோயினால் பாதிக்கப்பட்டுள்ளார்.

அவர் எந்த நேரமும் மரணமடையலாமென்பதை அடுத்து மரணச் சடங்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மனித மூளையைப் படிப்படியாக செயல் இழக்க வைத்து அதன்மூலம் உடல் உறுப்புக்களை செயல் இழக்க வைப்பது இந்த நோயின் தன்மையாகும் [இ-க]


## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி முத்துக்குமாரு சந்திராதேவி

தோற்றம்: 05 – 04 – 1945

மறைவு: 13 – 08 – 1996

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

41/3, கொண்டலடி ஒழுங்கை, நல்லூர்.

[68118]

## விற்பனைக்கு

வியாபார ஸ்தாபனங்களுக்கும், வீட்டுப்பாவனைக்கும் உகந்த இரும்புப் பெட்டகங்கள் ( Ironsafes ) விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:

இரும்புப் பெட்டகத் [ Ironsafe ] தொழிலகம், இல. 11, ... வீதி, யாழ்ப்பாணம்.

(68113)

## முகாமையாளர்/விற்பனையாளர் தேவை

இயந்திர வகை, இயந்திர உபகரணங்கள், புத்தகம், சஞ்சிகை, அலுவலக மற்றும் பாடசாலை மாணவர்களுக்கான உபகரணங்கள் விற்பனையில் அனுபவமுள்ளவர்கள் தேவை. அனுபவம் உள்ளவர்கள் மட்டும் தகுந்த அத்தாட்சிகளுடன் நேரில் வரவும்.

தொடர்பு முகவரி:

நிர்வாகி,

S. T. L.

இல. 117, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(68114)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## A/L MATHS 2001

பிரத்தியேக வகுப்புகள் 12 - 08 - 99 (வியாழன்) தொடக்கம் தினசரி காலை 7 மணிக்கு நடைபெற உள்ளன. புதிய பாடத் திட்டத்திற்கு அமைவாகக் கற்பித்தல் நடைபெறும். தொடர்புக்கு: ஆசிரியர் N. A. சயனன் (BSc), 60/1 வளாக வீதி, திருநெல்வேலி.

(68060)

## தவறிவிட்டது

ஒடக்கரை பருத்தித்துறையைச் சேர்ந்த சூரியகாந்தி தவராசா ஆகிய எனது தேசிய அ. அட்டை (642222139 V), விசேட அ.அட்டை, பிரிகேட் பாஸ், இலங்கை செஞ்சிலுவைச் சங்க அறிமுக அட்டை என்பன 23-07-99இல் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்படி முகவரியில் ஒப்படைத்துதவவும்.

(68096)

## விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள குளிர்சாதனப் பெட்டிகள் (Usha, Hitachi Sisil - 60) மற்றும் Organ (Pss - 26, CA - 110), ஹிற்றார்கள், வயலின், மிருதங்கம் மற்றும் கடைக்குரிய கண்ணாடி அலுமாரிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: P. தேவகுமார் (தேவு), மூளாய் றோட், வட்டுக்கோட்டை. (68092)

பந்தல் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: நா. சிவசுந்தரம், மூத்தவிநாயகர் கோயிலடி, சோமசுந்தரம் வீதி, ஆனைக்கோட்டை.

(68084)

Sitana Diesel Engine லாண்ட் மாஸ்ரர் புதியது பெட்டியுடன் விற்பனைக்கு உண்டு, தொடர்பு: சாருஜன், கொக்குவில் சந்தி, கொக்குவில். T.P No. 2961. (சி/8479)

## MATHS — ENGLISH

40 நாள்களில் ஆரம்பத்திலிருந்தும் O/L பரீட்சையில் Credit Distinction பெறுபேறடையவும் தரமான 1000 வினாக்களுக்கு விடையளிக்கப்படும். (ஆண்டு 9, 10 உட்பட) B Sc ஆசிரியர், 85, சிவன் கோயிலடி. சிவன் கோயில் மேற்கு வீதி, திருநெல்வேலி. (68042)

## திருமண சேவை

எம்மிடம் ஆண், பெண் குறிப்புகள் உண்டு. எங்கள் திருமணசேவை தொடர்ந்து நடைபெறுகின்றது என்பதை சகல வாடிக்கையாளருக்கும் அறியத் தருகின்றோம். வே. புண்ணியமூர்த்தி, "எம்-ஜி.ஆர் அகம், புத்தூர் சந்தி மீசாலை. (68094)

## முகாமைத்துவ டிப்ளோமா நெறி

வலி. தென்மேற்கு ஒக. 11 நாடளாவிய ரீதியில் இலங்கைதிறந்த பல்கலைக் கழகம் முகாமைத்துவ டிப்ளோமா கற்கை நெறிக்கு விண்ணப்பம் கோரியுள்ளது.

2000 — 2001 ஆம் கல்வி ஆண்டில் புதிய மாணவர்களைச் சேர்த்துக்கொள்ள சிறுவணிக முகாமைத்துவத்தில் தேர்ச்சிபெற்றவர்கள், அல்லது ஜி. சீ. ஈ. உயர்தரப் பரீட்சையில் சித்தி அடைந்தவர்கள் விண்ணப்பிக்கலாம்.

யாழ். மாவட்டத்தில் விண்ணப்பிக்க விரும்புவோர் யாழ். பிராந்திய நிலைய இயக்குநர் ச. ஆ. ஞானேந்திரனுடன்தொடர்புகொண்டு பதிவுகளை மேற்கொள்ளலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

விண்ணப்ப முடிவு திகதி எதிர்வரும் 15 ஆம் திகதி ஆகும். (இ- 185)

---

# வாழ்த்துகின்றோம்

சமாதான நீதிவானாக பதவியேற்ற

**திரு. சபாரத்தினம் சற்குணசிங்கம்**

(இளைப்பாறிய பிராந்திய பொறியியல் உதவியாளர்)

அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

இந்திரன் ஜுவெல்லர்ஸ்,
இல. 10, நவீன சந்தை, சாவகச்சேரி.

(சி/8486)

---

# தேவை

**த. குமாரசாமி ரெக்ஸ்ரைல்ஸ்**

இல. 44, 42 பெரியகடைக்கு

காசாளர், கணக்காளர், புடைவை வியாபாரத்தில் அனுபவமுள்ள விற்பனையாளர்கள் தேவை

[ஆண்கள் மட்டும்]

வியாழன், சனி காலை 9.00 மணி முதல் 1.00மணி வரை நேரில் வரவும்.

தொடர்புகளுக்கு:

**த. குமாரசாமி - ரெக்ஸ்ரைல்ஸ்**

352, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

T. P. NO: 2555 [68119]

---

# கண்ணீர் அஞ்சலி

எமது நிறுவன சிரேஷ்ட விரிவுரையாளர்

திரு. கு. சண்முகநாதன்

அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி சரஸ்வதி குமாரசாமி**

அவர்கள் இறைபதம் எய்தியமையிட்டு எமது கண்ணீர் அஞ்சலிகளைத் தெரிவித்து அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

விரிவுரையாளர்களும் மாணவர்களும்,
தேசிய கல்வி நிறுவக பட்டப்பின் கல்வி
இந்துமகளிர் கல்லூரி நிலையத்தினர்.

[68107]

---

# கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் முன்னாள் அதிபர்

திரு. கு. சண்முகநாதன்

அவர்களின் பாசமிகு தாயார்

**திருமதி குமாரசாமி சரஸ்வதி**

அவர்கள் 8 - 8 - 1999 அன்று இறைபதமெய்தியதையிட்டு அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை இறைஞ்சுகிறோம்!

— அதிபர், ஆசிரியர், மாணவர்கள்.
யா/கொட்டடி நமசிவாய வித்தியாலயம்.

[68116]

---

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 16 — 06 — 1930 | 02 — 08 — 1997 |

அமரர்

**வைரவப்பிள்ளை - சிவக்கொழுந்து**

[முன்னாள் ஆய்வுகூட உதவியாளர், புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி]

திதி; 11 — 08 — 1999

மன்னு ஈசுர ஆடியிற்பூசம் ஞாயிறு
அமாவாசை சித்தமுறு பேரோசை — துன்னுமிசை
அச்சுவேலி மாப்பாணன் சிவக்கொழுந்தன்
சிவகாமி பங்கயன்தாள்
நண்ணியடைந்தான் ஏத்து.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

ஸ்ரீவிக்கினேஸ்வரா வீதி,
அச்சுவேலி.

(67995)

---

# இறைவனடி இணைந்த 31 ஆம் நாள் நினைவஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 03 — 03 — 1930 | 10 — 07 — 1999 |

**தம்பிராஜா ஸ்ரனிஸ்லோஸ்**

"இரக்கத்தின் ஊற்றாகிய இறைவா! உமது அடியானாகிய தம்பிராஜா ஸ்ரனிஸ்லோஸ் நித்திய பேரின்பம் நிறைந்த உமது பரகதியில் இளைப்பாற உம்மை இரந்து மன்றாடுகிறோம்."

இவரின் ஆன்ம சாந்திக்காக பாண்டியந்தாழ்வு புனித அன்னாள் ஆலயத்தில் 11-08-99 புதன்கிழமை காலை 7 மணிக்கு இரங்கற்பலி ஒப்புக்கொடுக்கப்படும். இத்திருப்பலியில் பங்கு கொள்ள அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

பிரிவால் துயருறும்
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,

70/2, கொழும்புத்துறை வீதி,
பாண்டியந்தாழ்வு
யாழ்ப்பாணம்.

(68108)

---

# ஆறாம் மாத நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



அமரர் **வீரசிங்கம் தருமகுலசிங்கம்**
(தருமன்)

| தாயின் மடியில் | தாரப் பிரிவில் |
|---|---|
| 03 01-1959 | 17-02-1999 |

ஆறாத்துயரில் எம்மை நீ ஆழ்த்திச் சென்று மாதங்கள் ஆறாகி விட்டன. ஆண்டுகள் ஆயிரமானாலும் ஆறாதையா எம் மனம். நீறுபூத்த நெருப்பாக கொதிக்குதையா எம் இதயம் ஆறாக ஓடும் எம் கண்ணீர் காயவும் மாட்டாது. ஓயவும் மாட்டாது! வா என்று கூப்பிட்டால் வரமாட்டாய் என்று நாம் ஓவென்று கதறி அழுகின்றோம் பாதி வழிதனில் காலன் உன்னைக் கவர்ந்திட காரணமாய் இருந்தவர்கள் இறை நீதி வழிதனில் ஓலமிடும் நாள் வரும். மரணம் உன்னை மறைத்துவிட்டது. உன் உடலை மட்டும் எரித்துவிட்டது. எம் உயிரிலும் மேலான அன்புடன் உன் உயிர் சங்கமமாகி விட்டது. எம் இதயமெல்லாம் நிறைந்து நிற்கும் நீ என்றும் எம்முடன் வாழ்ந்திருப்பாய். தருமா! என்றும் எம் நாவில் நீ என்றைக்கும் தித்திக்கும் தேனையா!

17—02—1999 அன்று அகால மரணமடைந்த வீரசிங்கம் தருமகுலசிங்கம் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 12-08-99 ஆம் திகதி நடைபெறும். வீட்டுக் கிரியைகள் ஆத்ம சாந்திப்பிரார்த்தனை, மதிய போசன நிகழ்வு 13 ஆம் திகதி நடைபெறும். இவற்றில் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

தாய், சகோதரிகள்,
மைத்துனன்.

சோதிராஜா நிசாந்தன்
(மருமகன்)
42, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

(68111)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணாமற்போனோர்பற்றிய விவரங்களை வெளியிடுக

## பாதுகாப்பு அமைச்சுச் செயலரிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக. 11

யாழ். மாவட்டத்தில் காணாமல் போனோரின் விவரங்களையும் அவர்கள் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இடங்களையும் தெரியப்படுத்தவேண்டும் என்று வடபகுதியில் கைது செய்யப்பட்டுக் காணாமற் போனோர் பாதுகாவலர் சங்கம் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு அனுப்பி வைத்துள்ள பக்ஸ் செய்தியில் கோரிக்கை விடுத்துள்ளது

அச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

1996 ஆம் ஆண்டும் அதற்குப் பின்னரும் யாழ். மாவட்டத்தில் காணாற்போனோர் தொடர்பாக பாதுகாப்பு அமைச்சின் விசாரணைக் குழுவினர் —

மற்றும் 512 ஆவது படையணியாலும்—

இராணுவ பொலீஸாரினாலும்– விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்த விசாரணைகள் மூலம் காணாமற் போனோர் பிரச்சினைக்கு இதுவரையும் எந்த விதமான தீர்வையும் தரவில்லை.

மேற்குறிப்பிட்ட விசாரணைகளின் மூலம் பதில் எதுவும் கிடைக்காத காரணத்தினால் தங்கள் பிள்ளைகளின் பிரிவுத் துயரினால் நோயாளிகளாகி பல பெற்றோர்கள் மரணம் அடைந்துள்ளனர்.

512 ஆவது படையணி மற்றும் ராணுவப்பொலிஸ் நடத்திய விசாரணைகளின் பின் காணாமல் போனவர்கள் நிலை பற்றியோ, அவர்கள் எங்கு தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது பற்றியோ இதுவரையும் எந்தவிதமான தகவல் களும்எமக்கு வழங்கப்படவில்லை.

பாதுகாப்பு அமைச்சின் விசாரணைக் குழுவினால் நடத்தப்பட்ட விசாரணைகளின் பின் காணாமல் போனவர்களிற் சிலர் இறந்துபோய் விட்டதாக கண்டுபிடிக்கப்பட்டு தங்கள் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டபோதும் அது பற்றி விவரம் எதுவும் வெளியிடப்படவில்லை.

தமது பிள்ளைகள் காணாமல் போனதனால் மனத் தாங்கல் அடைந்துள்ள குடும்பங்களின் நிலையை கவனத்தில் எடுத்து காணாமல் போனோர் பற்றிய விவரங்களை வெளியிடுமாறு வேண்டுகின்றோம்.

இப்படி அந்த பக்ஸ் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது

இந்த பக்ஸ் செய்தியின் பிரதிகள் ஜனாதிபதிக்கும் பிரிட்டனில் உள்ள மனிதஉரிமைகள் குழுவினருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

(இ-3-5)


## கண்ணீர் அஞ்சலி

ஊரெழு கிராம அபிவிருத்திச் சங்க உறுப்பினர்

திரு. ச. மார்க்கண்டு

அவர்களின் அன்பு மனைவி

திருமதி மார்க்கண்டு சின்னத்தங்கச்சி

அவர்களின்மறைவினால்துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கிராம அபிவிருத்திச் சங்கம்,

ஊரெழு.

(68106)



வலி. வடக்கு மக்களினதும்

வன்னி மக்களினதும் துயர்துடைக்க

## இறையருள் வேண்டிப் பிரார்த்தனை

★⌣⌣★............★⌣⌣★

காலம்: 1999 – 08 – 13 ஆம் திகதி

வெள்ளிக்கிழமை மு. ப. 9 00 மணி

இடம்: தெல்லிப்பழை

காசிப்பிள்ளையார் கோயில்

வலி.வடக்கு மக்கள் தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர்ந்து, சுதந்திரமான, அமைதியான வாழ்வை மேற்கொள்ளவும் சொல்லொணாத் துன்பங்கள் மத்தியில் வாடும் வன்னி மக்களினது துயர் நீங்கவும் இறையருள் வேண்டி நடைபெறவிருக்கும் பிரார்த்தனையில் அனைத்து மக்களையும் பங்குபற்றுமாறு வேண்டுகிறோம்.

வலி. வடக்குப் புனர்வாழ்வுக் கழகம்.

தெல்லிப்பழை.

(சி/8484)



உ

ஓம் சக்தி



நயினாதிவு

## ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில்

## ஆடிப்பூரத் (பூரகர்மா) திருவிழா

**13–08–1999** வெள்ளிக்கிழமை

(பிரமாதி வருடம் ஆடி மாதம் 28 ஆம் நாள்)

அம்பிகை அடியார்களே!

ஆடிப்பூரத் தினத்தன்று (13—08—1999) காலை விநாயகர் வழிபாடு, யாக பூஜை, மூலமூர்த்தி அம்பாளுக்கு விசேட திரவிய அபிஷேகம், 108 சங்காபிஷேகமும், உற்சவ மூர்த்தி அம்பாளுக்கு விசேட திரவிய அபிஷேகம், நவோத்ர சகஸ்ர மஹா சங்காபிஷேகம் (1008 சங்குகள்), விசேட பூஜை, பூரகர்மா (ருது சாந்தி), தீபாராதனை. திருவூஞ்சல், வேதஸ்தோத்திர திருமுறைப் பாராயணம், புஸ்பாஞ்சலி ஆதியனவும், அதனைத் தொடர்ந்து அழகிய "தாமரைப்பூ" வாகனத்தில் அம்பாள் வீதியுலா வரும் அலங்காரக் காட்சியும் இடம்பெறும். அதனைத் தொடர்ந்து அடியார்களுக்கு அருட்பிரசாதமும் கல்யாண மண்டபத்தில் அன்னதானமும் (மகேஸ்வர பூஜை) சிறப்பாக உபயகாரர்களால் வழங்கப்படும்.

அடியார்கள் அனைவரையும் வருகை தந்து அன்னையை வழிபாடு செய்து, இஷ்ட சித்திகளைப் பெற்றுய்யுமாறு தாழ்மையுடன் வேண்டிக் கொள்ளுகின்றோம்.

ஆடிப்பூரத் திருவிழா உபயகாரர்கள்.

நயினாதிவு. (68103)


## காணாமற் போனோர் பற்றிய விசாரணை

தென்மராட்சிப் பிரதேசத்தில் காணாமற் போனவர்கள் பற்றிய விசாரணைகள் ஒகஸ்ட் 13ஆம், 14ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் பொலீஸ் நிலையத்தில் இரகசியப் பொலீஸாரால் நடத்தப்படவுள்ளன.

இந்த விசாரணையில் சாட்சியமளிக்கவுள்ள உறவினர்கள் தத்தமது பிரிவுக் கிராம அலுவலர்களிடம் தமது வதிவிடத்தை உறுதிப்படுத்திய கடிதத்தைப் பெற்றுச் செல்லுமாறு பிரதேச செயலக புனர்வாழ்வுப் பிரிவினர் அறிவித்துள்ளனர். (இ117)

## உதைபந்தாட்டம்

குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழகம் நடத்தும் "தூய ஒளி" வெற்றிக் கிண்ணத்துக்கான உதை பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் குருநகர் சென்ஜேம்ஸ் மகாவித்தியாலய மைதானத்தில் இன்றும்நாளையும் இடம்பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

இன்று

★ பி.ப. 3.30 மணி —அரியாலை வி.க 'ஏ' அணி எதிர் கிறின்பீல்ட் வி.க அணி.

★ பி.ப, 4.45 மணி — பாடும்மீன் வி.க அணி பீ. எதிர் றோயல் வி.க அணி

நாளை

★ பி.ப. 3.30 மணி — சென்மேரிஸ் வி, க அணி எதிர் [illegible]

★ [illegible] சென் மைக்கல் வி.க அணி எதிர் நாரதி வி.க அணி. (இ-51)

## விண்ணியல் கருத்தரங்கு

தொண்டமானாறு வெளிக்கள நிலைய ஆதரவில் தரம் எட்டு, தரம் ஒன்பது மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கான விண்ணியல் கருத்தரங்குகள் முதற்கட்டமாக நாளையும் நாளை மறுதினமும் நடைபெறவுள்ளன.

நாளை வியாழக்கிழமை இரவு நெடுந்தீவு மகா வித்தியாலயத்திலும் மறுநாள் வெள்ளிக்கிழமை இரவு நயினாதீவு மகாவித்தியாலயத்திலும் மேற்படி கருத்தரங்கும் செயல் முறைச் செயற்பாடும் இடம் பெறும்.

வள ஆளணியினராக ஏ. சோமாஸ்கந்தனும், பி. திபாகலிங்கமும் கலந்துகொள்வர்.

அவதானிப்புச் செயல் முறைகளை பலாலி ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் அ. கனகநாயகமும், பொ. ஜெயனந்தராஜாவும் மேற்கொள்வார்கள்.

மேற்படி நிகழ்வில் தீவக வலயக்கலவிப்பணிமனை அதிகாரிகளும் பணிப்பாளர்களும் இணைந்து செயற்படவுள்ளனர். [இ-க]

## பரீட்சை முடிவுகள்

தேசிய கல்வி நிறுவனத்தினால் கடந்த வருடம் நடத்தப்பட்ட பட்டப்பின் படிப்பு டிப்ளோமா இறுதிப் பரீட்சை முடிவுகள்வெளியாகிஉள்ளன

யாழ். இந்து மகளிர் கல்லூரியை கற்கை நிலையமாகக் கொண்டு மேற்படி பரீட்சைக்குத் தோற்றிய 31 பேரில் 1 பேர் திறமைச் சித்தி பெற்றுள்ளனர் என கற்கைநெறி இணைப்பாளர் கு. சண்முநாதன் தெரிவித்தார். (இ-7, க

## வாசகர் திருமுகம்

## ஆடி அமாவாசை நிர்ணயம்

08–08–1999 அன்று அதிகாலைஉதயனைத் தேடித்திருநெல்வேலிச் சந்தியிலுள்ள உதயன் விற்பனையாளரிடம் சென்று எனது பிரதியைப் பெற்றுக்கொண்டேன்.

ஆடி அமாவாசை விரத நிர்ணயம் பற்றிச் சிலரது கருத்துக்கள் உதயனில் பிரசுரமாகி இருந்தன.

ஏனைய சமயங்களில் அறிவாளர் சபை ஒன்றின் மூலம் தங்கள் விழாக்களை. விரதங்களைத் தீர்மானிப்பர். இந்திய இந்துக்கள், காஞ்சி ஆதீனம், மதுரை ஆதீனம், குன்றக்குடி ஆதீனம் முதலிய இடங்களில் இருக்கின்ற பேரறிஞர் மூலம் நெறிப்படுத்துவர்.

இலங்கையில் கிழக்குப் பகுதியிலும் மலையகப் பகுதியிலும் மதச் சம்பிரதாயப்படி இந்துக்கள் விழாக்கள் விரதங்கள் என்பவற்றை நெறிப்படுத்துவர்.

ஆனால் குடாநாட்டு இந்துக்களாகிய நாம் இரு பஞ்சாங்கங்களினால்விரத நாள்கள் பெருநாள்கள்குறித்துக் குழப்பமடைய நேரிடுகிறது எனது கடந்த அறுபது வருட அனுபவத்தில் மேற்கூறிய குழப்பங்களைப் பல தடவைகள் கண்டு வேதனை அடைந்தது உண்டு. வேதனை அடைகிறேன் என்று சொல்வதிலும்பார்க்க இந்துக்கள்வேதனைப்படுகின்றோம்என்று சொல்லலாம்.

ஆடி அமாவாசை விரதம் திதி விரதங்களில் ஒன்று. வள்ளுவன் கூற்றுப்படி தென்புலத்தாரை எள்ளும், தண்ணீரும் இறைத்து வரவேற்று, அவர்களுக்கு விருந்தளிக்கும் விரதமாகும். இந்த வழிபாடு சங்ககாலத்தில் இருந்தே அனுட்டிக்கப்பட்டு வருகின்றது.

குடாநாட்டு வாசிகள் கீரிமலை சென்று வழிபாடு இயற்றுவதுதான் வழமை. 1990 இன் பின்னர் அது குறைந்து 1996 இன் பின்னர் ஓரளவு சீரடைந்து வருகிறது.

நீண்ட அனுபவசாலியும், வேத, ஆகம, உபநிஷத விற்பன்னரும் சமஸ்கிருத, தமிழ்ப் பேரறிஞருமான மகராஜஸ்ரீ சண்முகநாதக்குருக்கள் 11–08–1999 புதன்கிழமையை ஆடி அமாவாசை விரதமாக அனுமதித்து மக்களையும கீரிமலைக்கு அழைத்துவிட்டார்- வில்லூன்றி தீர்த்த மகா மண்டபத்துக்கு வரும்படி மேற்படி ஆலய பரிபாலன சபையினரும் அழைத்துள்ளனர். அவர்கள் இரு பகுதியினருக்கும் நன்றி.

சோதிட நூல் வல்லார் 10 — 08— 1999 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 7மணி 5 நிமிடம் தொடக்கம் 11—08—1999 புதன்கிழமை மாலை 5 மணி 32 நிமிடம் வரையும் ஆடி அமாவாசைத்திதி என்று குறிப்பிட்டு விரதாதி நிருபணம் என்ற தலைப்பில் ஆடி அமாவாசை விரதம் எனக் குறிப்பிட்டுள்ளார்கள்

சூரிய கிரகணம் 11—08—1999 மாலை 6 மணி 14 நிமிடம் வரையாகும். ஆரம்பம்: மாலை 5 மணி 17 நிமிடத்தில்.

வானிலை ஆய்வாளர் இதனைப் பல நூறு வருடங்களுக்கு முன்பே கணித்துள்ளனர் அக் கணிப்பு தற்போதைய சோதிடர்களின் கணிப்பல்ல. சூரிய கிரகணத்துக்கும், திதி விரதமான – பிதிர்விரதமான— ஆடி அமாவாசைக்கும் ஒரு தொடர்பும் கிடையாது.

எனது கிராமம்—பிறந்தமண் நயினாதீவு. அங்கே நாகபூஷணி ஆலயக் குருக்கள் நாயனர் பட்டர் கி.மு. 200 தொடக்கம் கடமையாற்றி அவரது 37 ஆவது சந்ததியார் அக்கோயிலை நிர்வகித்து வருகின்றனர். சரித்திரப் பிரசித்திபெற்ற நாகபூஷணி தேவஸ்தானமும் 11 –08—1999 புதன்கிழமையே ஆடி அமாவாசைத் தீர்த்தம், ஆடி அமாவாசை விரதம் அனுட்டிக்கிறது என்பது கண்டு குறிப்பிடத்தக்கது

திருக்கோணேஸ்வரம், முன்னேஸ்வரம், கதிர்காமம், முகத்துவாரம், மண்டூர், வேவண்டன், நம்பொட என்னும் ஸ்தலங்களிலும் 11—08—1999 இல் ஆடி அமாவாசை விரதம் அனுட்டிக்க ஏற்பாடாகி உள்ளது.

யுத்தத்தினால் இடம்பெயர்ந்து அல்லற்படும் நாம் 11 — 08 — 1999 இல் மனச் சலனமின்றிப் பூரண அமைதியுடன், பிதிர்களை வரவேற்று, அவர்களை உபசரித்து அவர்களுக்கு அறுசுவை உண்டிபடைத்து நாமும் நமது விருந்தினர்களுடன் பகல் 12 மணிக்கு முன் உணவு அருந்துவோமாக.

தேவர்கள் பிதிர்களுக்கு விருந்தளிப்பது பகல் 11 மணி 55 நிமிடத்துக்கு முன் நடைபெற வேண்டும் என ஆகம, சோதிட நூல்கள் கூறுகின்றன.

சோதிட கலாநிதி

ஐயாத்துரை சரவணபவன்

கொக்குவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோழிப்பண்ணையாளர்களின்

## கவனத்துக்கு

**13 - 8 - 99** வெள்ளிக்கிழமை மாலை **4** மணிக்கு இடம்பெறும் விநியோகத்தில்

புறொயிலர் குஞ்சுகள், பிறிமா ஹை–லைன் வெள்ளை, சிவப்பு பேட்டுக் குஞ்சுகள்

போன்றவற்றுக்கான விலைகள் பெருமளவு குறைக்கப்பட்டுள்ளன. என்பதை மகிழ்வுடன் அறியத்தருகின்றேன். பதிவுகள் இடம்பெறுகின்றன.

வை. சிவகுமார்,
அத்தியடிச் சந்தி, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

(68105)



தென்மராட்சி மக்கள்

## சுலபமாக ரீ. வி. டெக் திருத்த

தென்மராட்சி மக்கள் போக்குவரத்துச் சிரமமின்றி ரீ. வி., டெக், றேடியோ, மணிக்கூடுகளை திருத்திக்கொள்ளவும், சிரமமான திருத்த வேலைகளை யாழ்ப்பாணத் தலைமையகத்தில் திருத்திக்கொள்ளவும்

**வீனஸ் டெல்கா**
11. பஸ் நிலையம், சாவகச்சேரி.
(மீன் சந்தை அருகில்)

(சி/830)ε


## பேராதனைப் பல்கலைக்கழக

கலைமாணிப்
பரீட்சையில் சித்தியடைந்தோருக்கான

## ஒன்றுகூடல்

புதிய உயர் கல்லூரியில் பயின்ற பேராதனைப் பல்கலைக்கழகப் பொதுக்கலைமாணி II பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான ஒன்றுகூடல் எதிர்வரும் 14–08–1999 சனிக்கிழமை காலை 9 மணிக்கு உயர்கல்லூரி நிலையத்தில் நடைபெறும்.

எனவே பரீட்சையில் சித்தியடைந்த அனைத்து மாணவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**உயர் கல்லூரி,** அமைப்புக் குழு.
யாழ்ப்பாணம். [68021]

## நோயாளர் அவதி

கோப்பாய் அரசினர் வைத்தியசாலையில் தண்ணீர் வசதி இன்றி நோயாளர்கள் பெரும் அவதிக்குள்ளாகின்றனர்.

நீர் இறைக்கும் இயந்திரம் மூலமே இந்த வைத்திய சாலைக்குத் தேவையான தண்ணீர் வழங்கப்பட்டு வந்தது. ஆனால் இந்த இயந்திரம் கடந்த மாதம் களவாடப்பட்டுவிட்டது.(இ–72)

யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்
இலங்கை

## முதுதத்துவமாணி தகுதிகாண் தேர்வு 1997

**முகாமைத்துவ கற்கைநெறி, வணிகவியல்**

மேற்படி பரீட்சைகளுக்கு விண்ணப்பித்த மாணவர்களுக்கான பரீட்சைகள் 21—08—99 இல் இருந்து 29—09—99 வரை நடைபெறும். மேலதிக விவரங்களையும் பரீட்சை அனுமதி அட்டையையும் பீடாதிபதி, முகாமைத்துவ கற்கை நெறியும் வணிகவியலும் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

–பதிவாளர்

[சி/8483]

# கேள்வி அறிவித்தல்

## வலிகாமம் வடக்கு பிரதேச சபை (காங்கேசன்துறை), மல்லாகம்

கீழ் குறிப்பிடும் வேலைகளுக்கான கேள்விகள் 25 – 08 – 99 ஆம் திகதி பிற்பகல் இரண்டு மணி வரை ரூ. 2, 000, 000.00 இற்கு மேல் அரசாங்கத் திணைக்களங்களில், இக்ராட் நிறுவனத்தில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரரிடம் இருந்து கேள்விகள் என்னால் ஏற்றுக்கொள்ளப்படும். இந்தக் கேள்விகள் 25 – 08 – 99 அன்றே பிற்பகல் மூன்று மணிக்குத் திறந்து பரிசீலிக்கப்படும்.

கேள்விகள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை 'தலைவர், வலி.வடக்கு பிரதேசசபை, காங்கேசன்துறை, மல்லாகம்'' என்ற முகவரிக்கும் இணைப் பிரதியை ''பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர், செட்டித்தெரு, யாழ்ப்பாணம்'' என்ற முகவரிக்கும் எதிர்வரும் 25 - 08 – 99 ஆம் திகதி பிற்பகல் இரண்டு மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்க வேண்டும்.

கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் வேலையின் பெயர் எழுதப்படல் வேண்டும்.

| கேள்வியின் பெயர் | வைப்புப் பணம் | பத்திரப் பணம் |
|---|---|---|
| 01. சோடாக்கம்பனி வீதி வேலை | 1000. 00 | 250. 00 |
| 02. குளமங்கால் வீதி வேலை | 1000. 00 | 250. 00 |
| 03. காட்டுப்புலம் வீதி வேலை | 1000. 00 | 250. 00 |
| 04. கோணாவளை வீதி வேலை | 1000. 00 | 250. 00 |
| 05. கும்பலை வீதி வேலை | 1000. 00 | 250. 00 |
| 06. காளிகோயிலடி ஆராய்ச்சிசீமா வீதி வேலை | 1000. 00 | 250. 00 |
| 07. முன்பள்ளி கூரை அமைத்தலும், திருத்தலும் | | |
| 1. சென்கைத்தா | 1000. 00 | 250. 00 |
| 2. முருங்கையப்புலம் | 1000. 00 | 250.00 |
| 08. பஸ்தரிப்பிடம்அமைத்தல் (பத்து இல) | 1000: 00 | 250. 00 |
| 09. வீதிக்கு பெயரிடும் வேலை | 1000. 00 | 250. 00 |
| 10. மதகு அமைத்தல், தெல்லிப்பழை அன்னமார் கோயில் வீதி | 1500. 00 | 250. 00 |

மேற்படி வைப்புப் பணத்தையும், கேள்விப் பத்திரக் கட்டணத்தையும் செலுத்துவதன் பேரில் 11 – 08 – 99 ஆம் திகதி முற்பகல் பத்து மணி முதல் எம்மால் வழங்கப்படும் படிவங்களில் மட்டும் கேள்விகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். கேள்விப் பத்திரக் கட்டணங்கள் மீளளிக்கப்படமாட்டாது. கேள்விப் பத்திர முடிவு திகதி 23-08-99 ஆகும். இது சம்பந்தமான மேலதிக விவரங்களைத் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர்,**
வலிகாமம் வடக்கு பிரதேச சபை,
காங்கேசன்துறை.

வலி.வடக்கு பிரதேச சபை.
தலைமை அலுவலகம்,
(காங்கேசன்துறை), மல்லாகம்.

[சி/8480]

## ஆசிரியர் கல்வி ஆசிரியர் அபிவிருத்தித் திட்டம்

உலக வங்கி நிதிமூலம்

## யாழ்ப்பாண தேசிய கல்வியியல் கல்லூரி நிர்மாணம்

## ஒப்பந்த அடிப்படையில் அலுவலர்களை நியமித்தல்

யாழ்ப்பாணத்தில் தேசிய கல்வியியல் கல்லூரி நிர்மாணிப்பதற்கு பின்வரும் அலுவலர்களை நியமிப்பதற்கு இலங்கை ஜனநாயகக் குடியரசு பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**திட்ட முகாமையாளர்:**

தகைமைகள்:
B. Sc. (Civil Eng.) பட்டயத் தகைமையுடன் கட்டட வடிவமைப்பு நிர்மாண மேற்பார்வை ஆகியவற்றில் 12 வருட அனுபவம்.

வேதனம்: ரூபா 32,000 (மாதமொன்றுக்கு)

வயதெல்லை;
35 வயதிற்கு மேற்பட்டோர் 55 வயதிற்கு உட்பட்டோர் விரும்பத்தக்கது.

**சிரேஷ்ட திட்ட கட்டடக் கலைஞர்:**

தகைமைகள்:
B. Sc, (BE) பட்டயத் தகைமையுடன் கட்டட வடிவமைப்பு நிர்மாண மேற்பார்வை ஆகியவற்றில் 12 வருட அனுபவம்.

வேதனம்: ரூபா 30,000 (மாதமொன்றுக்கு)

வயதெல்லை:
35 வயதிற்கு மேற்பட்டோர் 55 வயதிற்கு உட்பட்டோர் விரும்பத்தக்கது.

**கணிய அளவையியலாளர்:**

தகைமைகள்;
B. Sc. (QS) அல்லது அதற்கு ஒத்த தகைமையுடன் கட்டட குடிகள் சேவைகளில் 5 வருட அனுபவம்

வேதனம்: ரூபா 23.000 (மாதமொன்றுக்கு)

வயதெல்லை:
30 வயதிற்கு மேற்பட்டோர் 55 வயதிற்கு உட்பட்டோர் விரும்பத்தக்கது.

**படவரைஞர் (கட்டட நிர்மாணம்):**

தகைமைகள்:
தகுந்த தகைமையுடன் 10 வருட படவரைஞர் அனுபவம்.

வேதனம்: ரூபா 6,000 (மாதமொன்றுக்கு)

வயதெல்லை:
30 வயதிற்கு மேற்பட்டோர், 55 வயதிற்கு உட்பட்டோர் விரும்பத்தக்கது.

**பட வரைஞர் (கட்டடக் கலை):**

தகைமைகள்:
தகுந்த தகைமையுடன் 10 வருட படவரைஞர் அனுபவம்.

வேதனம்: ரூபா 8,000 (மாதமொன்றுக்கு)

வயதெல்லை:
30 வயதிற்கு மேற்பட்டோர், 55 வயதிற்கு உட்பட்டோர் விரும்பத்தக்கது.

**பொது எழுதுவினைஞர் / தட்டெழுத்தாளர்:**

தகைமைகள்:
தகுந்த தகைமையுடன் எழுதுவினைஞர் தட்டெழுத்தாளர், கேள்வி கோரல் ஆகியவற்றில் 10 வருட அனுபவம்.

வேதனம்: ரூபா 6,500 (மாதமொன்றுக்கு)

வயதெல்லை:
30 வயதிற்கு மேற்பட்டோர் 55 வயதிற்கு உட்பட்டோர் விரும்பத்தக்கது.

மேற்படி பதவிகள் யாவும் முதற்கட்டமாக மூன்று மாத ஒப்பந்தம் செய்யப்பட்டு திறமைகளைப் பொறுத்து ஒப்பந்தம் மேலும் புதுப்பிக்கப்படக் கூடியதுமாகும்.

விண்ணப்பங்கள், கல்வித் தகைமைகள், அனுபவங்கள் ஆகியவற்றை திகதி வாரியாகக் கொண்ட முழுமையானதாக, ''செயலாளர், கல்வி, பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு, வடக்கு கிழக்கு மாகாணம், திருகோணமலை'' என்ற முகவரிக்கு 99ஆம் ஆண்டு ஆவணி மாதம் 25ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும். (விண்ணப்பங்களுடன் கல்வித் தகைமை அனுபவங்கள் ஆகியவற்றின் சான்றிதழ்களின் புகைப்படப் பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்.)

அரசாங்க குழுக்களில் கூட்டுத்தாபனங்களில் சேவையாற்றுவோர் திணைக்களத் தலைவர்களினூடாக விண்ணப்பங்கள் அனுப்பப்படல் வேண்டும்.

மேலுறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவி குறிப்பிடப்படல் வேண்டும்.

**சுந்தரம் டிவகலாலா**
செயலாளர்
கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சு,
வடக்கு கிழக்கு மாகாணம்,
திருகோணமலை.

(சி/8464)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

## சுமுகமாகத் தொடருக!

நாற்பத்து மூன்று நாள்களாகத் தடைப்பட்டிருந்த வன்னிப் போக்குவரத்து, நேற்று முன்தினம் திங்கட்கிழமை வெகு சுமுகமாக மீண்டும் ஆரம்பமாகியது. வன்னியில் இருந்து வவுனியா சென்று திரும்பி வர முடியாமல் கஷ்டமுற்ற மக்களில் ஒரு பகுதியினர் புதிய பாதையூடாக தமது இடங்களுக்குத் சென்றனர். 10 லொறிகளில் வன்னிக்கு உணவுப பொருள்களும் கொண்டு செல்லப்பட்டன.

ஈழம் வாழ் அனைத்துத் தமிழ் மக்களின் மனங்களும் ஆறுதல் அடைந்துள்ளன வன்னிக்கான போக்குவரத்துப் பாதை மூடப்பட்டதால் அப்பகுதிவாழ் மக்கள் சாவின் விளிம்புக்குச் சென்றது கேட்டு ஏனைய பிரதேசத் தமிழர்கள் துடித்துப் போனார்கள்.

மூடப்பட்ட பாதைக்குப் பதிலாக மாற்றுப் பாதை ஒன்றை திறப்பதில் உண்டான இழுபறியும் தாமதமும் பெரும் ஆபத்தான நிலை ஒன்றைத் தோற்றுவித்தது. மனித நேய நோக்குடன் இவ்விடயம் அணுகப்படாமல் இழுத்தடிக்கப்பட்டதால் வன்னியில் மேலும் உயிரழிவுகளும் நோய் அனர்த்தமும் பெருகும் என்ற ஏக்கம் தமிழர்களின் இதயங்களைப் பிழிந்தது.

எனினும் அவர்கள் நடத்திய எதிர்ப்புப் போராட்டங்களும் ஆன்மீக வேண்டுதல்களும் பயன் தந்துள்ளன. வன்னி மக்கள் மேலும் பாதிப்புறாமல் தடுக்கும் வகையில், பிந்திய கட்டத்திலேனும் புரிந்துணர்வுடன் பணியாற்றி பாதையைத் திறப்பதற்கு இணங்கிய இரு சாராருக்கும் அவர்களுக்கிடையில் தொடர்பாளராக இருந்து செயற்பட்ட செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவுக்கும் மக்கள் சார்பில் நன்றிகள் தெரிவிக்கப்பட வேண்டும்.

புதிய போக்குவரத்துப் பாதையில் அசம்பாவிதம் எதுவும் நடைபெறாமல் மக்கள் பாதுகாப்பாகப் பயணம் செய்யவும், உணவுப் பொருள்கள் தடங்கல் இன்றி எடுத்துச் செல்லப்படவும் உறுதி செய்யப் படுவது அவசியம். அது குறித்து வன்னி மக்கள் மட்டுமன்றி ஏனைய பிரதேச மக்களும் மிக அக்கறையாக உள்ளனர்.

பாதை அமைந்துள்ள பகுதியில், அதனை அண்டிய பகுதியில் எத்தகைய இராணுவ நடவடிக்கைகளையும் மேற்கொள்வதில்லை என்று இராணுவத்தினரும் விடுதலைப்புலிகளும் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவிடம் உத்தரவாதம் — உறுதி — அளித்துள்ளனர். அதனைக் கடைசி வரை மீறாது கடைப்பிடித்தாக வேண்டும்.

பாதை ஒன்று திறக்கப்பட்டதால் வன்னிப் பகுதி மக்களின் உணவு, மருந்து, நோயாளர் சிகிச்சை, தபால் வசதி உட்பட்ட பல அத்தியாவசிய தேவைகள் நிறைவேற வாய்ப்பு ஏற்பட்டுள்ளது அவற்றுக்கு மீண்டும் தடங்கல் உண்டாகாமல் பார்த்துக் கொள்வது மிகமிக அவசியம்.

மக்கள் நலனுக்கு முன்னுரிமை தரும் அணுகுமுறையை சம்பந்தப்பட்ட சகல தரப்பினரும் கைக்கொண்டால் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவுக்கு அளித்த உறுதி மொழியைக் காப்பாற்றுவது மிக இலகுவானதாகும். செஞ்சிலுவைக் குழுவுக்கு வழங்கப்பட்ட அந்த உத்தரவாதத்தை மக்களுக்கும் அளிக்கப்பட்ட ஒன்றாகக் கருதிச் செயற்படின் யாவும் சுமுகமாகவும் நன்றாகவும் நடைபெறும். இதுவே மக்கள் எதிர்பார்ப்பும் ஆகும்.

# சிரத்தையுடனும் பய பக்தியுடனும் நோற்க வேண்டிய ஆடி அமாவாசை

எம்மை விட்டுப் பிரிந்த எம் முன்னோரை நினைவு கூர்ந்து அவர்கள் நலனுக்காகப் பிரார்த்தித்து விரதமிருந்து அதன் மூலம் நம் முன்னோரும் நாமும் நன்மையடையவும் நமது பிற்காலச் சந்ததி தழைத்தோங்கவும் வழிவகுக்கும் ஒரு புனிதமான விரத நாள் ஆடி அமாவாசை.

சூரியனைத் தந்தைக்குரியவனாகவும் சந்திரனைத்தாய்க்குரியவனாகவும் கொள்வது மரபு. சூரியனும் சந்திரனும் ஒன்றுபட்டுப் பூமிக்கு நேரே நேர்படும் நாள்கள் நம் தந்தை வழி முன்னோரை நினைவு கூர ஏற்ற நாள்களாகின்றன. இந்நாள்களே அமாவாசை தினங்கள்.

இவற்றுள்ளும் ஆடிமாதத்து அமாவாசை மிகச் சிறந்ததாகக் கொள்ளப்படுகிறது. ஏனெனில் நம் முன்னோரின் நலன்களைக் கவனிப்பவர்களான பிதிர்த் தேவதைகள் எனப்படும் தென்புலத்தாருக்கு உரிய திசை தெற்கு. சூரியன் தெற்கு நோக்கிச் சஞ்சரிக்க ஆரம்பிக்கும் காலம் ஆடி மாதம். ஆகவே ஆடி அமாவாசை பிதிர்க் கடனாற்றச் சிறந்த தினமாக அமைகிறது.

நம்மை விட்டுப் பிரிந்த நம் அன்புக்குரிய நமது முன்னோர்களின் நலன்களைக் கவனிப்பதற்கு இறைவனால் படைக்கப்பட்ட ஒருவகைத் தேவ குலத்தவரே பிதிரர்கள். பித்ரு என்ற வடசொல் பிதா எனப் பொருள்படும்.

இறந்துவிட்டவர்களுடன் நாம் தொடர்பு கொள்ள முடியாது. ஆகவே அவர்களது சேம நலன்களைக் கவனிப்பவர்களாகிய பிதிர்களைப் பூசை, தானம், தர்ப்பணம் என்பவற்றால் திருப்திப்படுத்தி அதன் மூலம் நம் முன்னோருக்கும் நமக்கும் நன்மையைத் தேடிக்கொள்கிறோம்.

நம் வாழ்வின் சேமநலத்தில் தேவர், பிதிரர்களின் பங்கு முக்கியமானது. ஆகவே தேவர்கடனும் பிதிர்க் கடனும் இல்வாழ்வுக்கு இன்றியமையாதவை. இதனாலேயே வள்ளுவப் பெருந்தகை

''தென்புலத்தார் தெய்வம் விருந்துஒக்கல்தான்என்றாங்கு
ஐம்புலத்தார் ஓம்பல் தலை''

என்கிறார். தென்புலத்தார் என்போர் பிதிரர். பிரபஞ்ச வெளியின் தெற்குப் பக்கம் அவர்களது இடமாகக் கருதப்படுவதால் தென்புலத்தார் எனப்பட்டனர்.

நாம் நமது பெற்றோரையும் முன்னோரையும் அவர்கள் உயிர் வாழும் போது அவர்களுக்கு எதுவித குறைவும் ஏற்படாதவாறு உணவு, உடை, உறையுள் கொடுத்துப் பாதுகாத்தல் வேண்டும். அவர்களுக்கு சிறந்தவைத்தியரைக் கொண்டு வைத்தியம்செய்வித்தல் வேண்டும். அவர்கள் இறந்த பின்னும் செய்ய வேண்டிய சில கடமைகள் உள்ளன: அதிலொன்று அவர்களுக்கு சிராத்தம், தர்ப்பணம் போன்றவற்றைச் செய்தலாகும்.

''பித்ரு தர்ப்பணம்'' என்பதற்கு பித்ருக்களைத் திருப்திப்படுத்தல் எனப்பொருள் படும். 'சிராத்தம்'' என்பதற்கு சிரத்தையுடன் செய்யப்படுவது என்று பொருள். ஆகவே சிரத்தையுடனும் மிக்க பய பக்தியுடனும் பிதிர்க்கடன் ஆற்ற வேண்டும். இவ்வாறு செய்தால் செல்வம், ஆயுள், கீர்த்தி, சுவர்க்கம் முதலிய நன்மைகள் கிட்டுவதுடன் சந்ததி தழைத்தோங்கும்; எதிரிகள் நீங்குவர் எனச் சமய நூல்கள் கூறுகின்றன. பிதிர்க் கடனாற்றாவிடின் பித்ரு சாபத்திற்கு ஆளாகி வம்சம் விளங்காமல் போகும் எனவும் கூறப்பட்டிருக்கிறது.

தந்தையை இழந்தவர்கள் ஆடி ஆமாவாசையன்று தீர்த்த சங்கற்பம் செய்து சமுத்திரத்தில் அல்லது சமுத்திரத்தோடு இணைந்த புண்ணிய நீர் நிலையில் தீர்த்தமாடுவர். தீர்த்த நீரை இறைவனது அருள் நீராக, எம் பாவங்களைக் கழுவும் புனித நீராக நினைத்து, நம் முன்னோரை மனத்திருத்தி அவர்களுடைய பாவங்கள் அகன்று அவர்களுக்கு நற்பேறு கிடைக்க வேண்டுமெனப் பரம்பொருளை வேண்டித் தீர்த்தமாடுவர், ''அருள் நோக்கிற் தீர்த்த நீர் ஆட்டிக் கொண்டாய்'' என்பது அப்பர் வாக்கு.

தீர்த்தமாடியபின் எள்ளும் நீரும் கொண்டு பிதிர்த்தர்ப்பணம் செய்தல் வேண்டும். தர்ப்பணத்தில் எள்ளும் தர்ப்பைப் புல்லும் முக்கிய பங்கு வகிக்கிறது, இவையிரண்டும் விஷ்ணுவின் உடலிலிருந்து தோன்றியதாகக் கூறப்படுகிறது. உலகிலுள்ள எல்லாப் புண்ணிய தீர்த்தங்களினதும் சாரமே தர்ப்பையும் எள்ளும் என விதந்துரைக்கப்படுகிறது. கெட்ட தேவதைகளுக்கு விஷ்ணு பரமவைரியாதலால் எள்ளைப் பாவிப்பது மூலம் கெட்ட தேவதைகளால் உண்டாகும் இடர்ப்பாடுகள் நீங்கும்.

ஆடி அமாவாசை தினத்தன்று இயன்றளவு தான தருமங்கள் செய்வதும் முக்கியம்.

ஈழத்தில் திருக்கேதீச்சரத்துப் பாலாவித்தீர்த்தம், திருக்கோணேஸ்வரத்துப் பாபநாசதீர்த்தம், கீரிமலை நகுலேஸ்வரர் தீர்த்தம், பூர்வ தனுக்கோடி எனப்படும் வில்லூன்றித் தீர்த்தம். பொன்னாலை திருவடிநிலை தீர்த்தம், மட்டக்களப்பு அமிர்தகழி மாமாங்கேஸ்வரர் தீர்த்தம், கொழும்பு முகத்துவாரத்தில்கடலோடு சங்கமிக்கும் புனித தீர்த்தம் ஆகியனவும்,

இந்தியாவில் இராமேஸ்வரமும், மூன்று சமுத்திரங்கள் சங்கமிக்கும் கன்யாகுமரியும், கங்கை, யமுனை, கோதாவரி, நர்மதா, சிநது. காவேரி, துங்கபத்ரா, தாமிரபரணி முதலாய புனித கங்கைக்கரைகளும் திரிவேணி சங்கமமும் பிதிரர்களுக்கு தீர்த்தப் பிராபதம் செய்வதற்குச் சிறந்த இடங்களாகும்.

★

(நன்றி: இந்துசாதனம் — பிரமாதி, ஆடி மாத இதழ்)

## நல்லை கந்தன் உற்சவம் 16 ஆம் திகதி ஆரம்பம்

கொழும்புத்துறை, ஓக, 11

நல்லூர் கந்தசுவாமி கோயில் வருடாந்த உற்சவம் எதிர்வரும் 16 ஆம் திகதி காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி இருபத்தேழு நாள்கள் நடைபெறும்.

முக்கிய திருவிழாக்கள் நடைபெறும் நாள்கள் வருமாறு:-

ஓகஸ்ட் 25 மாலை 5.00 மணி மஞ்ச உற்சவம் —

செப்ரெம்பர் 2 மாலை 5.00 மணி கார்த்திகை உற்சவம் — செப் 4- காலை 7.00 மணி சந்தான கோபாலர் உற்சவம் மாலை 5.00 மணி கைலாசவாகனம்—

செப் 5- காலை 7. 00 மணி கஜவல்லி மகாவல்லி உற்சவம்- மாலை 5.00 மணி வேல் விமானம்—

செப்- 6காலை 7.00 மணி தண்டாயுதபாணி உற்சவம்

செப்- 7 மாலை 5.00 மணி சப்பறம்—

செப்- 8 காலை 7.00 மணி தேர் உற்சவம்—

செப்- 9. காலை 7.00 மணி தீர்த்த உற்சவம்—

செப்- 10 மாலை5.00 மணி பூங்காவனமும்—

செப்- 11 மாலை 5,00மணி வைரவர் சாந்தியும் உற்சவமும்.

[இ-ரி]

## நாளை

ஆடி 27

வியாழக்கிழமை

திதி: பிரதமை

பிற்பகல் 4 23 வரை.

நட்சத்திரம்: மகம்

பின் இரவு 3.35 வரை.

சுபநேரம்: 7.34—9.04

ராகுகாலம்: 1.34—3.04

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## சந்நிதியான் ஆச்சிரம நிகழ்வுகள்

தொண்டமானாறு ஓக 11

தொண்டமானாறு செல்வச் சந்நிதி ஆலய உற்சவத்தை முன்னிட்டு சந்நிதியான் ஆச்சிரம பேரவையால் பல்வேறு நிகழ்வுகள் நடத்தப்பட உள்ளன.

நாளை வியாழன் காலை 10.00மணியளவில் அருட்கவி சி. வினாசித்தம்பியின்செல்வக் கந்தன் பற்றிய சொற்பொழிவும் வெள்ளிக்கிழமை தாவடி சத்திய சாயி நிலையத்தாரின் பஜனையும் சனிக்கிழமை வித்துவான்தில்லை மணியின் பண்ணிசையும், ஞாயிற்றுக்கிழமை யாழ். பல்கலைக் கழக தமிழ்துறை பேராசிரியர் அ. சண்முகதாஸின் 'தமிழ் முருகன்' பற்றிய சொற்பொழிவும் இடம்பெறும்.

(இ-ரி)

### உதயவாக்கு

முட்டாள் மகிழ்ச்சியைத் தூரத்தில் தேடுகிறான் அறிஞன் அதைத்தன் கால்களின் அருகிலேயே வளரும்படி பார்த்துக் கொள்கிறான்.

ஜேம்ஸ் ஓபன் ஹீம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமய சந்நிதிகளில்

அரியாலை பிரப்பங்குளம் மகாமாரி ஆலயத்தின் புனரமைக்கப்பட்ட சப்பறத்தில் இன்று புதன்கிழமை பிற்பகல் 4.15 மணியளவில் அம்பாள் வீதிவலம் வருவார்.

சூரிய கிரகணத்தை முன்னிட்டு மாலை 5.30 மணிக்கு சப்பறம் இருப்பிடத்தை வந்தடையும். நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு தேர் உற்சவமும் 10.30 மணிக்கு கும்பாபிஷேக மலர் வெளியீட்டு விழாவும் இடம் பெறும்.

மலர் வெளியீட்டு விழாவில் யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் பேராசிரியர் கோபால கிருஷ்ண ஐயர் கலந்து கொள்வார். வெள்ளிக்கிழமை காலை தீர்த்தோற்சவம் நடைபெறும். (இ-க)

★ ★ ★

காரைநகர் மணற்காடு ஸ்ரீகும்பநாயகி முத்துமாரி அம்பாள் ஆலயத்தில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 6 மணிமுதல் ஆடிக் குளிர்த்தி உற்சவம் நடைபெறும்.

அன்றைய தினம் அம்பாளுக்கு ஆயிரத்தெட்டு சங்காபிஷேகமும் உற்சவமூர்த்திக்கு 108 சங்காபிஷேகமும் பூசை, ஆராதனைகளும் இடம்பெறும். (க-30)

★ ★ ★

சண்டிலிப்பாய் சீரணி ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலயத்தில் ஆடிப்பூர உற்சவத்தை முன்னிட்டு நாளை வியாழக்கிழமை ஏக தின இலட்சார்ச்சனை நடைபெறவுள்ளது மறுநாள் வெள்ளிக்கிழமை அபிஷேகம், சாயரட்சை பூசை அம்மன் வீதி உலா என்பன இடம்பெறும். (க-135)

## மற்றும் ஒரு மாணவிக்கு 8 டி

கடந்த வருடம் டிசெம்பர் மாதம் நடைபெற்ற ஜி. சி. ஈ சாதாரண தரப்பரீட்சை முடிவுகளை மீளாய்வு செய்ய விண்ணப்பித்த சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவி செல்வி அகல்யா சேகராஜா மீளாய்வின் பின்னர் 8 டி பெற்றுள்ளதாக பரீட்சை திணைக்களத்தினால் பெறுபேறு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இவரின் முன்னைய பெறுபேறு 7 டி 1 சி ஆகும்.

மீளாய்வு செய்யப்பட்ட இவரின் பெறுபேறுடன் சுண்டுக்குளி மகளிர் கல்லூரியில் 8 டி எடுத்த மாணவிகளின் எண்ணிக்கை 5 ஆக உயர்ந்துள்ளது. (இ-5)

## யோகர் நினைவு

கொழும்புத்துறை யோகர் சுவாமியின் ஆயிலிய நட்சத்திர தின பூசை சுவாமிசமாதிக் கோயிலில் இன்று புதன் கிழமை பிற்பகல் 3. 30 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும்.

இந்த நிகழ்வில் சுவாமிகளின் நற்சிந்தனை, பஜனை, கூட்டுப்பிரார்த்தனைப் பாடல்கள் என்பனவும் இடம் பெறும். [உ-30]

## நன்கொடை

வலிகாமம் தென் மேற்கு பிரதேச சபை எல்லைக்குட்பட்ட 68 சனசமூக நிலையங்களுக்கு 61 ஆயிரத்து 200 ரூபாவும், பொது நூலகங்களுக்கு 12 ஆயிரம் ரூபாவும், மகப்பேற்று மற்றும் பிள்ளைகள் பராமரிப்பு நிலையங்களுக்கு 20 ஆயிரம் ரூபாவும் இந்த ஆண்டு நன்கொடையாக உள்ளூராட்சி ஆணையாளரிடமிருந்து கிடைத்துள்ளன. (இ-ரி)

# நெடுந்தீவு பிரதேச சபையின்

# வேலைகள் விவரம்

யாழ்.மாவட்டத்தில் பல்வேறு வசதிகளும் வாய்ப்புகளும் அற்று வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மக்கள் என்பது போல் வறுமைக்கோட்டின் கீழ் உள்ள பிரதேச சபையே நெடுந்தீவு பிரதேச சபையாகும்.

இப்பிரதேச சபையை ஈழமக்கள் ஜனநாயகக்கட்சி (ஈ.பி.டி.பி) உறுப்பினர்களாகிய நாம் பொறுப்பேற்ற பொழுது பற்றாக்குறையான நிதியைக்கொண்டு இத்தீவில் எவ்வித அபிவிருத்தித் திட்டங்களையும் நிறைவேற்ற முடியாத நிலையில் இருந்தோம்.

இவ்வேளையில் ஈழமக்கள் ஜனநாயகக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும், செயலாளர் நாயகமுமாகிய கௌரவ கே. என். டக்ளஸ் தேவானந்தா . நா. உ. அவர்கள்; யாழ். மாவட்ட மாநகரசபை உறுப்பினரும், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். மாவட்ட பிரதம அமைப்பாளருமான தோழர் வீ. கே. ஜெகன் அவர்களினதும் ஆலோசனைகளும் அறிவுரைகளும் எமக்கு புதுத்தென்பை அளித்தன; அளிக்கின்றன.

மேலும் இப்போர்க்கால சூழ்நிலையில் யாழ். மாவட்ட ஏனைய பிரதேசங்களைப் போலன்றி இத்தீவகத்தில் முழு நிர்வாகமுமே ஈழமக்கள் ஜனநாயகக்கட்சியின் நிர்வாகத்தின் கீழ் உள்ளதால் எம் தீவக முன்னேற்றத்திற்கு பிரதேச சபை தன்னாலான திட்டங்கள் அனைத்தையும் சிறப்பான முறையில் நிறைவேற்றுகின்றது.

எம் பிரதேச சபை மூலம் மேற்கொள்ளப்பட்ட. மேற்கொள்ளவுள்ள வேலைத்திட்டங்களை மக்களுக்கு தெரிவிப்பதில் பெருமையும் பெருமிதமும் அடைகின்றோம்.

| | | |
|---|---|---|
| புலவர் ஏ. டபிள்யூ. அரியநாயகம் | ச. பொ. தில்லைநாதன் | கே. நவநீதன் |
| ஜே. பி. யூ. எம். | செயலாளர், | உபதலைவர், |
| தலைவர் | பிரதேச சபை, | பிரதேச சபை, |
| பிரதேசசபை | நெடுந்தீவு, | நெடுந்தீவு, |
| நெடுந்தீவு. | | |

## நெடுந்தீவு பிரதேச சபை, நெடுந்தீவு

கௌரவ நாடாளுமன்ற உறுப்பினரும்
ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமுமான

### கௌரவ கே. என். டக்ளஸ் தேவானந்தா

பா. உ. அவர்களின் முயற்சியால்
மாண்புமிகு ஜனாதிபதியிடமிருந்து பெறப்பட்ட

## விசேட மூலதன நிதி ரூபா 30 இலட்சம் - 1998

அ) விசேட மூலதன நிதி 1998 இல் முடிக்கப்பட்ட வேலைகள் விவரம்

01. மரமுந்திரிகைக் கன்றுகள் வழங்கல் — 200,000/-
02. நெடுந்தீவு மத்தி றோ. கத். சேமக்காலை எல்லை — 50,000/-
03. நெழுவினி விநாயகர் இந்து அறநெறிப் பாடசாலை — 50,000/-
04. கரமத்தை கந்தசாமி இந்து அறநெறிப் பாடசாலை — 50,000/-
05. சென். ஜேம்ஸ் சனசமூக நிலைய பாலர் பாடசாலை தளபாடங்கள் — 50.000/-
06. பெருக்கடி விநாயகர் இந்து அறநெறிப் பாடசாலை — 50,000/-
07. கத்தோலிக்க மறைக்கல்வி பாடசாலை தளபாடங்கள் — 50,000/-
08. நெடுந்தீவு மரமுந்திரிகை தோட்டம் அமைத்தல் — 50,000/-
09. நெடுந்தீவு நீர்விநியோகத் திட்டம் தொட்டி அமைப்பு — 100.000/-
10. பிரதேசசபை அலுவலகப் புனரமைப்பு, பொதுநூல் நிலைய திருத்தம் — 150,000/-
11. பனை அபிவிருத்தி தோட்டம் அமைப்பு — 100,000/-
12. பிரதேச சபை அலுவலக விஸ்தரிப்பு — 100,000/-

1998 விசேட மூலதன நிதியில்
நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற வேலைகள்

13. சென். அன்ரனீஸ் சனசமூக நிலையம் தொலைக்காட்சிப் பெட்டியும் மின்பிறப்பாக்கிக் கொள்வனவும் — 75,000/-
14. சென். ஜேம்ஸ் சனசமூக நிலையம் தொலைக் காட்சிப் பெட்டியும் மின் பிறப்பாக்கிக் கொள்வனவும் — 75,000/-
15. நெடுந்தீவு மத்தி சனசமூக நிலைய கட்டட வேலைகள் — 50,000/-
16. சூசையப்பர் வீதி திருத்தம் — 50,000/-
17. நெடுந்தீவு வடக்குப் பகுதி கடலணை அமைத்தல் — 300,000/-
18. பிரதேச சபை மண்டப விஸ்தரிப்பு — 200,000/-
19. பிரதேச சபை பணிமனைக்கான உபகரணமும் தளபாடங்களும் — 300,000/-
20. கொல்களம் அமைத்தலும் இறைச்சிக்கடை திருத்தமும் — 100,000/-
21. குடிதண்ணீர் விநியோக விஸ்தரிப்பு ஒரு பகுதி — 200,000/-
22. மின்சார விஸ்தரிப்பு ஒரு பகுதி — 200,000/-
23. அசெம்பிளி ஓவ் கோட் சபையின் சேமக்காலை வேலி ஓய்வு நாள் பாடசாலை தளபாடங்கள் வழங்கலும் — 50,000/-
24. சாறாப்பிட்டி சலவைத்தொழிலாளர் வக்கும் வீதியும் புனரமைப்பு — 50,000/-
25. கேணிகளும் கிணறுகளும் புனரமைத்தலும் புதிய குடிநீர் கிணறுகள் அமைத்தல் — 300,000/-
26. மாதா கோயில் மேற்கு வீதி — 50,000/-

ஆ) 1998 ஆம் ஆண்டு பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதியிலிருந்து செய்யப்பட்ட வேலை விவரம்

1. புனித அந்தோனியார் சனசமூக நிலையம், குருநகர் நெடுந்தீவு தளபாடம் வழங்கல், கட்டடத் திருத்தம் — 50,000/-
2. நெடுந்தீவு மத்தி சனசமூக நிலையம், பாலர் பாடசாலை தளபாடம் வழங்கல் — 90,000/-
3. நெடுந்தீவு மேற்கு சனசமூக நிலையம் — 150,000/-

1999 ஆம் ஆண்டு பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதியிலிருந்து பின்வரும் வேலைகள் நடை பெற உள்ளன,

01. நெடுந்தீவுமேற்கு குடிதண்ணீர் விநியோக விஸ்தரிப்பு — 100,000/-
02. புனித அந்தோனியார் சனசமூக நிலையம் பாலர் பாடசாலை (குழந்தையேசு) தளபாடம் வழங்கல் — 25,000/-

(இ) சபை நிதி வேலைகள்
1998ஆம் ஆண்டு செய்த வேலை விவரம்

01. மின்சார நிலைய வீதிக்கு காணி கொள்வனவும் வீதி திருத்தமும் — 11,760 /-
02. பிரதான நீர்குழாய் திருத்தமும். புதிய இரும்புக் குழாய் இணைப்பும் — 12,045 /-
03. அலுவலக உபகரணங்கள் — 14,530/-

1999 ஆம் ஆண்டு சபை நிதியில் பின்வரும் வேலைகள் செய்து முடிக்கப்பட்டன,

04- நெடுந்தீவு 04 ஆம் வட்டார கிணறு திருத்தம். — 3,686 /-
05. நெடுந்தீவு றோ. க. பெண்கள் பாடசாலை ஊஞ்சல், றாட்டணம் — 10,000 /-
06. நெடுந்தீவு சீக்கிரியாம்பள்ள பாடசாலை ஊஞ்சல் றாட்டணம் — 10,00 /-
07. நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலய ஊஞ்சல் றாட்டணம் — 10,000/-
08. தொலைபேசித் தொடர்பிணைப்பு — 72,618/-
09. அலுவலக உபகரணங்கள் — 20,000 /-
10. தொலைக்காட்சிப் பெட்டி உபகரணமும் காட்சி அறை அமைத்தலும் — 50,000/-
11. தீவக விளையாட்டுப் போட்டிக்கான வெற்றிக் கிண்ணம் — — 1,500 /-
12, நினைவு தூபி திருத்தம் — 2,7700 /-

1999 ஆம் ஆண்டு சபையில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் வேலை விவரம்

13. நெடுந்தீவு ஆஸ்பத்திரியடியில் பஸ்தரிப்பு நிலையம் கட்டுதல் — 25,000/-

(ஈ) 1998 ஆம் ஆண்டு உள்ளூராட்சித் திணைக்களம், திருகோணமலை, நிதியிலிருந்து செய்யப்பட்டவேலைகள்

01. கிணறுகள் துப்பரவு செய்தலும் குளோறின் கொள்வனவும்–குளோறின்இடலும் மேற்பார்வைகளும் — 112,000/-

(உ) 1998 ஆம் ஆண்டு வடக்கு மீள் புனரமைப்பு அதிகாரசபை (றான்) நிதியிலிருந்து செய்யப்பட்டவேலை விவரம்,

01. சந்தைக் கடைத் தொகுதி அமைத்தல். — 500,000/-
02. முருக்குச்சி குடியிருப்பு வெட்டகாடு வீதி திருத்தம். — 400.000/-
03. பெருக்கடி விநாயகர் உள்ளக வீதி திருத்தம். — 100,000/-

1999 ஆம் ஆண்டு வடக்கு மீள் புனரமைப்பு அதிகார சபையிலிருந்து (றான்) பின்வரும் வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன

01. நெடுந்தீவு மேற்கு அம்மன்கோயில் சுற்று வீதி திருத்தம். — 150,000/-
02. செபநாயகபுரம் வீதி திருத்தம் — 100,000/-
03. அம்மாவோடை நீர்த்தடை மதகு அமைத்தல் — 200.000/-

நெடுந்தீவு பொதுமக்களுக்கு மின்சாரம் வழங்குவதற்காக கௌரவ கே. என். டக்ளஸ் தேவானந்தா, பா. உ. அவர்களினதும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். மாவட்ட பொறுப்பாளர் தோழர் வீ. கே ஜெகன் அவர்களினதும் முயற்சியினாலும், வடக்கு மீள் புனரமைப்பு அதிகாரசபை (றான்), வடபகுதி கடற்படை தளபதி அவர்களால் நெடுந்தீவு பிரதேசசபைக்கு எரிபொருள் வழங்கப்பட்டு வருகின்றது.

### குடிதண்ணீர் விநியோகத் திட்ட வேலைகள்

ஐரோப்பிய சமூக மனிதாபிமான அமைப்பு (எக்கோ)ம், ஜேர்மன் ஜீ. ரி. சற் நிறுவனம் ஊடாக யாழ். மாவட்ட நீர் வழங்கு வடிகால் அமைப்பு சபையின் அனுசரணையுடனும் நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் அவர்களின் ஒத்துழைப்புடனும் எமது பிரதேசசபையினால் நிர்வகிக்கப்பட்டு வந்த குடி தண்ணீர் விநியோகத்தைநெடுந்தீவு மக்களின் உதவியுடன் புனரமைப்புச் செய்து உதவியது.

| | |
|---|---|
| எக்கோ, ஜீ. ரி. சற் நிறுவனம் | — ரூபா 5,260,000/- |
| பிரதேசசபை விசேட மூலதன நிதி ஒதுக்கீடு | — ரூபா 300,000/- |
| நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபரினதும், பொதுமக்களினதும் பங்களிப்பு | — ரூபா 168,865/- |
| அருட்திரு மொன்பேட் அடிகளார் | — ரூபா 5,000/- |

நெடுந்தீவுக்கான தொலைத்தொடர்பு வசதிகள் எதுவுமே இல்லாத நிலையில் பிரதேசசபையின் வேண்டுகோளை ஏற்று கௌரவ கே. என். டக்ளஸ் தேவானந்தா, பா. உ. அவர்கள் நெடுந்தீவு பொதுமக்களுக்கு தொலைபேசி இல. 023/32185 இலக்கமுடைய இலவச தொலைபேசி சேவையை வழங்கினார்கள்.

நெடுந்தீவு பொதுமக்கள் கடற்போக்குவரத்தினால் பல்வேறு துயரங்களையும் தொல்லைகளையும் அனுபவித்து வருகின்றனர். 1986 ஆம் ஆண்டிலிருந்து நெடுந்தீவு குறிகாட்டுவான் சேவையில் ஈடுபட்டிருந்த குமுதினி மோட்டார் படகும் சேவையாற்ற முடியாத நிலையில் இருந்தது இந்நிலையை யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கௌரவ. டக்ளஸ் தேவானந்தா அவர்களுக்கு பிரதேச சபையின் தலைவர் உறுப்பினர்கள் எடுத்துக்கூறிய பொழுது பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதியிலிருந்து மேற்படி படகினை திருத்தி சேவையில் ஈடுபடுத்த யாழ்.மாவட்ட வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு,
ஒதுக்கப்பட்ட நிதி — ரூ. 250,000/-

[சி/8467]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விமானப் பயண பாதுகாப்பு அனுமதி வழங்கப்பட்டவர்களின் விவரம்

ஓகஸ்ட் 3 ஆம் திகதி வரை' விமானப் பயண அனுமதி பெற்றவர்களின் பெயர் விவரம்:

கரவெட்டி

கே. பார்வதி (103190ஏ), எம். அன்னம்மா (078050ஏ), கே. தங்கராசா (086783ஏ), எஸ். சதாசிவம் (087797ஏ), எஸ். பத்மாவதி (093797ஏ). கே. சொர்ணம் (095448ஏ). ஆர். ஞானபாஸ்கரன் (098030ஏ), ஆர். வல்லிபுரம் (098211ஏ), எஸ். விஜயகுமாரி (100917ஏ), எஸ். சுஜிதா (100917பி).

ஆர். லலிதா (100923ஏ), ஜி. பரமேஸ்வரி (100923பி), எஸ். திருச்செந்திநாதன் (100952ஏ), ரி. பரமேஸ்வரியம்மா (100952பி). எஸ். சண்முகநாதன் (101005ஏ), எஸ். தவமலர் (101005பி), எஸ். சிவகரன் (101005சீ), எஸ். சரஸ்வதி (101086ஏ), எஸ். குகா (101086பி), பி. அனந்தகுமார் (101125ஏ).

ஆர். இளையதம்பிமணி (101149ஏ), வி. இராஜேஸ்வரன் (101149பி), எஸ். கணேஸ்வரம்மா(101154ஏ), என். கீதரூபி (101154பி), என். ஞானரூபி (101154சீ), பி. ஆறுமுகம் (101191ஏ), பி. சிவதர்சினி (101191பி), ஆர். ராஜகௌரி(101221ஏ). கே. விக்னேஸ்வரராஜா (102798ஏ), ரி. கதாதரன் (102815ஏ),

கே. சாந்தரூபன் (102815சி), கே. துர்ஷியா (102815டி). ஆர். சிவசங்கர் [102834 ஏ), எம்.எம். மன்மதநாயகம் (102861ஏ), எம். டொறின் புஷ்பராணி (102861 பி), வி. நவமணி (102880 ஏ), வி. கௌரி (102889 பி). வி. சண்முகநாதன் (102927 ஏ), ரி. சிவலிங்கம் (102988 ஏ), எஸ். அமுதினி (102988 பி).

ஆர். இராமகிருஷ்ணன் (103010 ஏ(, கே. ஜெயராணி (103017 ஏ), ஆர். குலசிங்கம் (103017 பி), பி. யோகநாதன் (103101 ஏ), வை. சகுந்தலாதேவி (103101பி), வை. சிந்துஜன் (103101 சீ), வை. சிந்துகா (103101 டீ)' எம். மனோன்மணி (103125 ஏ). வீ. கிருஷ்ணதேவி (103129 ஏ), வீ. மயூரன் [103129 பீ].

ஏ. கந்தசாமி [105379 ஏ], ரீ. அழகேஸ்வரி [105389 ஏ], எஸ். கலைவாணி [105396 ஏ],எஸ்.தமிழரசி [105397) ஏ), சீ. ஆறுமுகம்[105407ஏ, ஏ. பாக்கியம் [105407 பீ]. ரீ, பூபாலசிங்கம் [105409ஏ], வீ. கனகலிங்கம் [105411ஏ], பீ. லெட்சுமிப்பிள்ளை (105412 ஏ], எஸ். வீரகதி [105413 ஏ]'

வீ. சிந்துஜன் [103129சீ], வீ. சிவலிங்கம் [103181ஏ], எஸ். கணபதிப்பிள்ளை [103165பீ], எஸ். கிருஷ்ணபவன் [103176ஏ]. எஸ். சின்னத்துரை [103177ஏ], ரீ.ஏ. பரமசோதி[103179ஏ], ரீ. ஏ. அனுஷா [103179பீ] பீ.கமலாம்பிகை[103189ஏ], கே. பார்வதி[103190ஏ], வீ. ஆவப்பிள்ளை [105334ஏ].

ஏ.அருமைநாயகம்[105334 பீ], வீ. நடராஜா [105344 ஏ[,எஸ்.பிரபாகரன்[105361 ஏ], பீ. விவேகானந்தராஜா [105371ஏ], வீ. அதுரன் [105371பீ], வீ. தவதுரன் [105371சீ], வீ. சிவதுரன் [105371டீ], வீ. ஆதுர் [105371ஈ], வீ. தவதுரை [105371எவ்], எஸ். ஜெயவதனி [105378ஏ].

வீ. சின்னம்மா (105413 பீ), கே. செல்லத்துரை (105416 ஏ), என். துரைராஜா (105418 ஏ), பீ. ஜலுசினி (105428 சீ). கே. தவராஜா (105442 ஏ), எஸ். பாலசோதி (105444 ஏ), பீ. பபிநாதன் (105444பீ), ஏ. சிவநாதன் (105446ஏ), ஆர். சுந்தரலிங்கம் (105453 ஏ), கே.ஜெகதீசன் (105477 ஏ).

ஜே. வனிதா (105477பீ), ஜே. தீபா(105477 சீ), ஆர். சீனியர் (105478 ஏ). கே. இளங்கீரன் (105479ஏ) கே. கமலராணி (105482ஏ), கே. கணபதிப்பிள்ளை (105485 ஏ), கே. அரியகுட்டி (105487 ஏ). டாக்டர் பீ. ஜெயகௌரி (105497 ஏ)வீ. காயத்திரி. (105497 பீ), கே.சரோஜினிதேவி (105504 ஏ), ஆர். பூமணி (105507 ஏ),

ஆர் நிருபா (105507 பி). ஆர். நிரோஜன் (105507சீ) எஸ். சீனிவாசன் (105516ஏ). ஈ. சீ. அருள்நந்தன் (105517 ஏ), எம். பரமநாதம் (105518 ஏ). கே. வாசுகி (105815 பீ). எஸ். சிற்றம்பலம் (106657ஏ), எஸ். யோகராஜா (106658 பீ), வை. ரவிசந்திரிகா (106659சீ).

வை. மாதங்கி (106658டீ), எம். எஸ். மேரி காமலிற்றா (106665 ஏ), எஸ். லசிந்தன் மெர்வின் (106665 பீ). எம். எஸ் மேரிதர்ஷகா (106665 சீ). கே. பூமணி (106680ஏ), வீ. துளசி (106685 ஏ). கே. யோகராணி (106689 ஏ). எஸ். கனகம்மா (106695ஏ), கே. வேலும்மயிலும் (106704 ஏ), எஸ். வள்ளிப்பிள்ளை (106710 ஏ), எஸ் தேவராணி (106716 ஏ), எஸ். ஜெகன் (106716 பீ), எஸ். அங்மினி (106716 சீ).

ஏ ஜெயபாரதி(106729ஏ), வீ. நவரட்ணம் (106730ஏ), கே. பொன்னா (106731ஏ), எஸ். கந்தையா(106732ஏ), கே. மார்க்கண்டு (106733ஏ, வீ. சுதர்ஷனி (106735ஏ), ஆர். தவமணி (106737ஏ). எஸ். யோகேஸ்வரி (106738 ஏ), எஸ். அனுஷயா(106738 பீ), எஸ்.ஆர்த்தி(106738சீ), எஸ். அதிதன் (106738டீ), எஸ். கார்த்திகா(106738ஈ),

பி.டபிள்யூ. ராணி(106743 ஏ), ஏ. செல்லம்மா (106754 ஏ), எஸ். பரமேஸ்வரன் (106782ஏ), பீ. வசந்தி (106782பீ), பீ. சுமன் (106782சீ), பீ. கிரிஷாந்தி (106782ஏ), வீ.ராஜேந்திரா (106784ஏ), ஆர். உமாவதி (106784பீ), வீ. மகேஸ்வரி (106789ஏ), ஆர்.புஸ்பராணி (106792ஏ), ஆர். ரமணன் (106792பீ), எஸ். சுபர்னா (106793ஏ), எஸ். ரவிச்சந்திரன் (106805ஏ),

ஆர். டிலக்சன் (106805 பீ), எஸ். ராசமணி(106814 ஏ), எஸ். பூமணி (106818 ஏ), எஸ். ரீ. தாமோதரம்பிள்ளை (106819ஏ), எஸ். ஜெயராணி (106821ஏ), ஜி, வீ. கார்த்திகேசு (106828ஏ), கே. தேவகுமார் (106831ஏ), ரீ. சோதிமலர் (106831பீ), நாசரட்ணம் (106833ஏ), எஸ். நாகராஜா (106833 பீ), என். பகீரதி(106833 சீ), பீ. கணபதிப்பிள்ளை 106831ஏ). எஸ். கனகம்மா (106835ஏ), ஏ. சோமசுந்தரம் (106842ஏ).

எஸ். பிறேமா (106851ஏ), ரீ. சுசிஜேந்திரராணி (106856ஏ), ரீ. ஜெகன் (106856பீ), எஸ். நடராஜா (106858ஏ). எஸ். மங்கை. யற்ரமவி (106861ஏ), கே. சரஸ்வதி (106863ஏ), கே. சுதர்ஷன் (106863பீ), ரீ. நகுலேஸ்வரி (106866ஏ), ரீ. ஹம்சாரினி (106866பீ), ஆர். வீரன் (106879ஏ), ரீ. தங்கம்மா (106881ஏ), ஆர் துரைசிங்கம் (106881பீ), ரீ· காண்டீபன் [106881சீ].

[தொடரும்]

## பங்கீட்டு அட்டைக்கு மீண்டும் அரிசியும் சீனியும்

யாழ்ப்பாணம், ஓக. 11

ப. நோ. கூ. சங்கக் கிளைகள் ஊடாக மீண்டும் 10 கிலோ அரிசியும் 2 கிலோ சீனியும் 'உ' கார்ட் வைத்திருப்பவர்களுக்கு பணத்திற்கு வழங்கப்படவுள்ளது.

அரிசி கிலோ 31ரூபாவுக்கும் சீனி கிலோ 26 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்படவுள்ளது.

நாளை முதல் சகல ப.நோ. கூ சங்கக் கிளைகளிலும் இந்த விநியோகம் இடம்பெறும் என்று யாழ்.செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

## மனித உரிமை ஆணைக் குழுவுடன் முஸ்லிம் பிரதிநிதிகள் சந்திப்பு

யாழ்ப்பாணம், ஓக. 11

இடம் பெயர்ந்த வடமாகாண முஸ்லிம் அமைப்பின் பிரதிநிதிகள் மனித உரிமைகள் ஆணைக்குழு யாழ். அலுவலக அதிகாரிகளை அவர்களது அலுவலகத்தில் நேற்றுக் காலை சந்தித்து தமது பிரச்சினைகள் தொடர்பாக கலந்துரையாடினர்.

முன்னாள் உதவி மேயர் எம். ஜி. பசீர், ஒஸ்மானியா கல்லூரியின் முன்னாள் உப அதிபர் கே.எம். எஸ். ஹமீட், டாக்டர் ஏ.எம். சித்திக் அலி, எம். யு. எம். தாகிர், எம். எஸ். ராசிக், ஐ. நலீம், எம். அன்வர், எம். எஸ். எம். அஜுமன், எம். ஜி. எஸ். நூர்டீன் ஆகியோரே ஆணைக்குழு இணைப்பதிகாரி எஸ். சிறீதரன் மற்றும் விசாரணை அதிகாரி என். ஜீவேஸ்வரா ஆகியோரைச் சந்தித்து உரையாடினர்.

இடம்பெயர்ந்து வாழும் முஸ்லிம் மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளருக்கு முகவரியிடப்பட்ட மகஜர் ஒன்றை எஸ். ஸ்ரீதரனிடம் அவர்கள் கையளித்தனர்.

ஆரம்பத்தில் முஸ்லிம் மக்கள் வாழ்ந்த இடங்கள் இப்போது படையினரின் பாதுகாப்பு வலயமாக இருந்தும் கூட அங்குள்ள வீடுகளின் ஜன்னல், கதவு, வீட்டுக்கூரைகள் உட்பட அனைத்து உடைமைகளும் களவாடப்பட்டு வருகின்றன என்றும் —

இந்தத் திருட்டுக்களைக் கட்டுப்படுத்துமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் பல தடவைகள் முறைப்பாடு செய்யப்பட்டபோதும் திருட்டைத் தடுப்பதற்கான எந்த வித நடவடிக்கைகளும் இது வரை எடுக்கப்படவில்லை என்றும்—

குழுவினர் தெரிவித்தனர்.

முஸ்லிம் மக்கள் வாழ்ந்த பகுதிக்கு நிரந்தரமாக ஒரு கிராம அலுவலர் நியமிக்கப்படவில்லை என்றும்—

எனவே இந்தத் திருட்டுக்களைத் தடுப்பதற்கு திறமையுடைய ஒரு சிறந்த கிராம சேவை உத்தியோகத்தர் நியமிப்பதற்கு ஆவன செய்ய வேண்டும் என்றும்— முஸ்லிம் பிரதிநிதிகள் கோரினர்.

[உ-9-6]

## விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், ஓக. 11

புலோலி கூவில் தீபஜோதி சனசமூக நிலையத்தின் வெள்ளி விழாவை முன்னிட்டு தீபஜோதி விளையாட்டுக்கழகம் ஒழுங்கு செய்துள்ள விளையாட்டு விழா இன்று நடைபெறுகின்றது.

யாழ். மாவட்ட ரீதியாக விளையாட்டு வீரர்கள் பங்குபற்றும் சைக்கிள் ஓட்டம், மரதன் ஓட்டம், கயிறிழுத்தல் ஆகியன இந்த விளையாட்டு விழாவில் இடம்பெறும்.

## வரலாற்று மலர்

யாழ்ப்பாணம், ஓக. 11

பருத்தித்துறை பிரதேச வரலாறு பற்றிய மலர் ஒன்று இம்மாதம் 28 ஆம் திகதி வெளியிடப்படவுள்ளது.

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவு. சனசமூக நிலையங்களின் சமாசம், சமூக அபிவிருத்தி மன்றம், பிராந்திய உள்ளூராட்சித் திணைக்களம் என்பன இணைந்து இந்த மலரை வெளியிடவுள்ளன.

இந்த நூலில் இப்பிரதேசம் தொடர்பான நிலவியல், வாழ்வியல், பேரென்றவை தொடர்பான ஆய்வுக்கட்டுரைகளும் இடம்பெற்றுள்ளன. (இ-ரி-5)

## ஆடி அமாவாசை விரத நிகழ்வு

யாழ்ப்பாணம், ஓக. 11

ஆடி அமாவாசை தினமான இன்று வில்லூன்றி மற்றும் கீரிமலை தீர்த்தக்கேணிகளில் பொதுமக்கள் தீர்த்த சங்கற்பம் செய்வதற்கும் பிதிர்க் கருமங்கள் மற்றும் தர்ப்பணம் செய்வதற்கும் வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

வில்லூன்றியில் இன்று காலை 8 15 மணி தொடக்கமும் கீரிமலையில் காலை 6 மணி தொடக்கமும் பிதிர்க் கருமங்கள் செய்வதற்கும் தீர்த்த சங்கற்பத்துக்கும் வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது

கீரிமலை நகுலேஸ்வரம் ஆலயம் மற்றும் மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயம் ஆகியவற்றுக்குச் சென்று வழிபாடு செய்யும் பொருட்டு விசேட போக்குவரத்து ஏற்பாடுகளை வடபிராந்திய போக்குவரத்துச்சபை செய்துள்ளது.

இதேவேளை சுழிபுரம் திருவடிநிலைத் தீர்த்தக்கரையிலும் பிதிர்க்கருமங்கள் செய்வதற்கு கடற்படையினர் அனுமதி அளித்துள்ளனர் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-7)

## பருத்தித்துறைக்கு இழுவைப்படகு

யாழ்ப்பாணம், ஓக. 11

காங்கேசன்துறை துறைமுகத்துக்கு நேற்று வந்து சேர்ந்துள்ள 'லங்கா முடித்த' கப்பலுடன் இழுவைப்படகு ஒன்றும் எடுத்துவரப்பட்டுள்ளது.

கப்பலில் இருந்து பொருள்களை இறக்குவதற்கு பயன்படுத்தப்படும் இந்த இழுவைப் படகு பருத்தித்துறை துறைமுகத்தில் கப்பல்களில் இருந்து பொருள்களை இறக்குவதற்கு பயன்படுத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (உ-5-ரி)

## பிணையில் விடுவிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 11

சைக்கிள் திருட்டு தொடர்பாக மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட இரு சந்தேக நபர்கள் மேலதிக நீதிவான் இ த. விக்னராஜாவினால் சரீரப் பிணையில விடுவிக்கப்பட்டனர்.

மல்லாகத்தைச் சேர்ந்த சிவசுப்பிரமணியம் கிட்டிணகுமார் (வயது 20), சின்னராசா சசிகுமார் (வயது 22) ஆகியோர் சைக்கிள் திருட்டு தொடர்பாகக் கடந்த 3 ஆம் திகதி சுன்னாகம் பொலீஸாரினால் கைது செய்யப்பட்டனர்.

மல்லாகம் நீதிமன்றத்தில் இவர்கள் ஆஜர் செய்யப்பட்டபோது இவர்களின் சார்பில் ஆஜரான சட்டத்தரணி பொன் பூலோகசிங்கத்தின் கோரிக்கையின் பேரில் சந்தேக நபர்களைப் பிணையில் விட நீதிவான் அனுமதித்தார். (உ-ரி-5)

## சுவிசேஷ ஆராதனை

யாழ்ப்பாணம், ஓக. 11

இலங்கைபெந்தெகொஸ்தே சபையினரால் நடத்தப்படும் எழுப்புதல் கூட்டங்களும் சுவிசேஷ ஆராதனைகளும்நாளை வியாழக்கிழமை மாலை முதல் எதிர்வரும் 15 ஆம் திகதி ரை சுண்டிக்குளி யாழ்ப்பாண பெந்தெகொஸ்தே சபைச்சாலையில் நடைபெறும்,

தினமும் மாலை 4 00 மணிக்கு ஆராதனைகளும் வெள்ளி சனி நாள்களில் காலை 9.00 மணிக்கு காத்திருப்புக் கூட்டமும் இடம்பெறும். (உ-ரி)

## கலந்துரையாடல் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஓக. 11

வலிகாமம் கல்வி வலயப் பிரிவு இரண்டு பாடசாலை ஆசிரியர்களுக்கு இன்று இணுவில் மத்திய கல்லூரியில் ஏற்பாடாகியிருந்த சிறுவர் உரிமைகள் தொடர்பான கலந்துரையாடலும் செயலமர்வும் தவிர்க்கமுடியாத காரணங்களால் எதிர்வரும் 16 ஆம் திகதிக்குப் பிற்போடப்பட்டுள்ளன என்று வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் வீ. இராசையா அறிவித்துள்ளார்.

(உ-3)

## கைதடி...

(முதலாம் பக்கத் தொடர்)

னர்.

குண்டு வெடித்த சமயம் அப்பகுதியில் நின்றஇளைஞர்கள், பொதுமக்கள் அச்சததினால் அங்கிருந்து பாதுகாப்புத் தேடி ஓடினர்.

அப்படி ஓடும்போது அப்பகுதியில் தனது அடையாள அட்டையைத் தவறவிட்டதாகக் கூறப்படும்—

கைதடியைச் சேர்ந்த— வி. ஜெபக்குமார் (வயது 19) என்பவர் பின்னர் நேற்றுக் காலை படையினரால் கைது செய்யப்பட்டார்.

இவரது கைது தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ் அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நுணாவில் பகுதியில் கடந்த ஜூலை மாதம் முதலாம் திகதி இடம்பெற்ற கிளைமோர் தாக்குதலை அடுத்து படையினரின் தாக்குதலுக்கு இலக்காகி யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றவர் இந்த இளைஞன் என்று தெரியவந்தது.

(உ-3-6-5-117)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்று மாலை...

[முதலாம் பக்கத் தொடர்]

2 நிமிடங்கள் 27 விநாடிகள் அது நீடிக்கும் என்றும்— தெரிவிக்கப்பட்டது.

இன்றைய சூரிய கிரகணத்தை நேரடியாக கண்களால் பார்ப்பது ஆபத்து என்றும்—

கறுப்பு வெள்ளை பிலிம் றோல் ஊடாக அதனை பார்க்கலாம் என்றும்—தெரிவிக்கப்பட்டது. (உ-3-21)

## நல்லூரில்...

[முதலாம் பக்கத் தொடர்]

ரும் வீடுகளைச் சோதனையிட்டதுடன் அடையாள அட்டை மற்றும் குடும்பப் பதிவு அட்டைகளையும் பார்வையிட்டனர்.

தேடுதலின்போது சந்தேகத்தின் பேரில் படையினரால் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்ட இளைஞர்கள் சிலர் முத்திரைச் சந்தை முகாமில் வைத்து விசாரிக்கப்பட்ட பின்னர் விடுதலை செய்யப்பட்டனர்.

(உ-7-15-86-180)

## அமெ, அரசுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்)

இந்த விவரங்கள் அடங்கிய செய்திக் குறிப்பு ஒன்றை அமெரிக்காவில் வசிக்கும் புலிகளின் சட்டத்தரணி விஸ்வநாதன் ருத்திரகுமார் விடுத்துள்ளார். (உ-3)

## புளொட்...

(முதலாம் பக்கத் தொடர்)

கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ். பொலீஸாரால் கைது செய்யப்பட்ட இவர் நெல்லியடிப் பொலீஸாரால் நேற்று முன்தினம் பருத்தித்துறை நீதிவான் இ.த விக்னராஜா முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டார்.

இவரை எதிர்வரும் 13 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக இது வரை நான்கு புளொட் உறுப்பினர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (உ-3-109)


## 20 லொறி...


(முதலாம் பக்கத் தொடர்)

குறித்து அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம்மூலமாக தமக்கு நேற்று அறிவிக்கப்பட்டதாகவும் விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

உணவுப் பொருள்களுடன் வரும் லொறிகளில் 10 லொறிகள் கிளிநொச்சி மாவட்டத்துக்கும் 10 லொறிகள் முல்லைத்தீவு மாவட்டத்துக்கும் அனுப்பிவைக்கப்படும் எனவும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

நீண்ட நாள்களின் பின்னர் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு 300 தபால் பொதிகள் நேற்று எடுத்துச் செல்லப்பட்டன. [உ-3-7-164]





வன்னியில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்கும், இராணுவக்கட்டுப்பாடற்ற பகுதிக்கும் இடையே மாங்குளம் ஊடாக நேற்று முன்தினம் திறக்கப்பட்ட போக்குவரத்துப் பாதையில் இராணுவத்தினர் தமது நிலைகளில் நிற்பதையும், செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு அதிகாரிகள் இருவர் விடுதலைப் புலிகளின் சோதனை நிலையம் நோக்கிச் செல்வதை முதலாவது படத்திலும் —

இந்தப் பாதையூடாக வரும் பயணிகளை வரவேற்க விடுதலைப் புலிகள் அமைப்புப் பிரமுகர்கள் தமது நிலைகளில் நிற்பதையும், விடுதலைப் புலிகள் விடியோ கமரா சகிதம் காத்திருப்பதையும் 2 ஆவது படத்திலும் காணலாம்.

படங்கள்: எஸ். ராஜ்குமார்

# பாக். வேவு விமானத்தை இந்தியா சுட்டு வீழ்த்தியது

## 16 இராணுவத்தினர் உயிரிழப்பு

புதுடில்லி, ஓக. 11

பாகிஸ்தானின் கடற்படைக்குச் சொந்தமான வேவு விமானம் ஒன்று நேற்று முற்பகல் 11.15 மணியளவில் இந்திய இராணுவத்தினரால் சுட்டு வீழ்த்தப்பட்டுள்ளது,

குஜராத் மாநிலத்தில் கஜ் என்னும் இடத்துக்கு அருகில் உள்ள லக்பட் என்னும் பகுதியிலேயே இந்த விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டது.

இந்தியாவின் எல்லைக்குள் அத்துமீறிப் பிரவேசித்தது என்ற காரணத்தினாலேயே தாம் அந்த விமானத்தைச் சுட்டு வீழ்த்தியதாக இந்திய இராணுவம் அறிவித்துள்ளது.

இதேவேளை—

அந்த விமானம் பாகிஸ்தான் எல்லைக்குள் பறந்து கொண்டிருந்த போதே இந்திய இராணுவம் அதனைச் சுட்டு வீழ்த்தியதாகவும்—

அதில் பயணம் செய்த 16 இராணுவத்தினரும் உயிரிழந்துவிட்டதாகவும்—

பாகிஸ்தான் அறிவித்துள்ளது. (உ-7)

## வன்னிக்கு...

[முதலாம் பக்கத் தொடர்]

பேரணியில் சமசமாஜக் கட்சிப் பிரமுகர் வாசுதேவ நாணயக்காரவும் பங்குபற்றவிருக்கின்றார்.

அதேநேரம்—

இனப்பிரச்சினைக்காக முன்வைக்கப்பட்டுள்ள தீர்வுத் திட்டத்தை விரைவில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு கோரி லங்கா சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ் கட்சி, ஸ்ரீலங்கா மக்கள் கட்சி ஆகியன இணைந்து நாளை லிப்டன் சதுக்கத்தில் ஆர்ப்பாட்டப் போராட்டம் ஒன்றை நடத்தவிருக்கின்றன. [உ-3]

## மட்டுநகர்...

[முதலாம் பக்கத் தொடர்]

கிடைத்த தகவலை அடுத்தே இந்தத் தேடுதல் இடம்பெற்றதாகக் கூறப்பட்டது

தேடுதலில் கைதான ஐந்து இளம் பெண்கள் உட்பட ஒன்பது பேர் விசாரணைக்காக மட்டக்களப்பு பொலீஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

(உ-3-21)

# முல்லைக் கடலில் 2 மீனவர்களை காணவில்லை

கடந்த வெள்ளியன்று முல்லைத்தீவுக் கடலில் மீன் பிடிக்கச் சென்ற சகோதரர்களான இரண்டு குடும்பஸ்தர்கள் இது வரை வீடு திரும்பவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது

முல்லைத்தீவு மணற்குடியிருப்பைச் சேர்ந்த காந்தி செல்வநாயகம் கொன்ஸ்ரான்வோ (வயது 39) மற்றும் அவரது சகோதரரான காந்தி செல்வநாயகம் கொன்ஸன்ரைன் (வயது 26) என்பவர்களே இவ்வாறு காணாமல் போனவர்களாவர். (உ-7)

# வவுனியாவில் 5 இளைஞர்கள் நேற்றுக் கைது

வவுனியா, ஓக. 11

வவுனியா, குருமண்காட்டுப் பகுதியில் நேற்றைய தினம் படையினர் மேற்கொண்ட தேடுதலில் 5 இளைஞர்கள் கைது செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் வவுனியாவில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதல்களை அடுத்தே படையினர் அங்கு தேடுதல் நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தியுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

(உ-7-164)

## இளைஞனை தாக்கிய வழக்கில்

# புளொட் உறுப்பினர் எழுவரும் யாழ். நீதிமன்றால் விடுவிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 11

புளொட் முகாமில் வைத்து கடந்த ஏப்ரல் மாதம் இளைஞர் ஒருவரை தாக்கியதாக குற்றம் சாட்டப்பட்ட ஏழு புளொட் உறுப்பினர்களும் நேற்று யாழ். நீதிமன்றத்தினால் விடுவிக்கப்பட்டனர்.

இந்த ஏழு பேரின் மீதும் சட்டவிரோதமாக கூடியது, வழக்காளியை சட்டவிரோதமாக தடுத்து வைத்திருந்தது, சிறுகாயம் விளைவித்தது, கடத்தியமை ஆகிய நான்கு குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டிருந்தன.

இவற்றில் இரு குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்க முடியாமையினால் பொலீஸாரினால் வாபஸ் பெறப்பட்டது.

ஏனைய இரு குற்றச்சாட்டுகள் தொடர்பாக எதிராளிகளுக்கும் வழக்காளிக்கும் இடையில் இணக்கம் ஏற்படுவதற்கு சம்மதம் தெரிவிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து முறைப்பாட்டுக்காரருக்கு நட்டத்தொகையாக ரூபா 5 ஆயிரமும் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்திற்கு தர்மநிதியாக தலா நூறு ரூபாவும் செலுத்துமாறு எதிராளிகளுக்கு கட்டளையிட்ட யாழ். மேலதிக நீதிவான் எஸ்.ஏ.ஈ. ஏகநாதன் அடுத்த தவணையை இம்மாதம் 16 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார். (உ-5-ரி)

# தேர்தல் பணியில் மாணவர் படை

இந்தியாவின் எல்லைப் பிரதேசங்களில் அச்சுறுத்தல்கள் ஏற்பட்டுள்ளதை அடுத்து நடக்கவிருக்கும் தேர்தலில் பாதுகாப்புப்பணியில் தேசிய மாணவர் படை ஒன்று ஈடுபடுத்தப்படவிருப்பதாகத் தேர்தல் ஆணையாளர் எம்.எஸ். கில் அறிவித்துள்ளார்.

பெற்றோரின் விருப்பப்படி இந்தப் படையில் சேர்க்கப்பட்டுள்ள 18 வயதுக்கு மேற்பட்ட மாணவர்கள் இந்தப் பணியில் ஈடுபடுத்தப்படுவர்.

## ஜெனீவாவில்...

[முதலாம் பக்கத் தொடர்]

கலந்து கொண்ட இந்தப் பேரணியில் செம்மணிப் புதைகுழிகளைச்சித்திரிக்கும் வகையிலான ஊர்திகளும் பவனி வந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

பேரணியின் இறுதியில் ஜெனீவாவின் நகரப்பகுதியில் உள்ள ஐ. நா. திடலில் பொதுகூட்டம் ஒன்றும் நடத்தப்பட்டது.

இந்தப் பொதுக் கூட்டத்தில்—

★ தமிழ் மக்கள் மீது போராயுதமாக உணவையும் மருந்தையும் பயன்படுத்துவது நிறுத்தப்பட வேண்டும்.

★ 'தமிழீழம் தமிழருக்கானது' என்பதை அனைத்து நாடுகளும் அங்கீகரிக்க வேண்டும்.

★ தமிழ் மக்களுக்குத் தேசிய சுயநிர்ணய உரிமை உண்டு என்பதை அனைத்துலகமும் அங்கீகரிக்க வேண்டும்.

★ இலங்கையில் நிரந்தர அமைதி ஏற்பட, உண்மைக்கும் நீதிக்கும் ஆதரவு கொடுத்து மூன்றாம் தரப்பு உதவியுடன் அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் பேச்சுகள் ஆரம்பிக்கப்படல் வேண்டும். இல்லையேல் இலங்கையில் சுதந்திர தமிழீழத்தை அங்கீகரிக்க வேண்டும்.

★ தமிழீழ மக்கள் சார்பான எந்த அரசியல் விடயங்களையும் தமிழீழ மக்களின் பிரதிநிதிகளான விடுதலைப் புலிகளுடன் மட்டுமே பேசித் தீர்க்கவேண்டும்.

— என்ற தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

(உ-7-க)

## வளைகுடாவில் பரிதாபம்

# தீப்பற்றிய கப்பலில் இருந்த 3 இலங்கையரைக் காணோம்

ஓமான், ஓக. 11

வளைகுடாவில் எண்ணெய்க் கசிவுகளை சேகரிக்கும் பணியில் ஈடுபட்டிருந்த லைபீரிய நாட்டுக் கப்பல் ஒன்று திடீரென தீப்பற்றியதில் அதில் இருந்த மூன்று இலங்கையர் உள்ளிட்ட ஆறு சிப்பந்திகளை காணவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் கடந்த வாரம் இடம் பெற்றுள்ளது.

இந்தக் கப்பலில் இருந்த ஏனைய 24 சிப்பந்திகளை ஓமான் கரையோரக் காவல் படையினர் மீட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

கப்பலில் தீ ஏற்பட்டதும். தீயணைப்புப் படையினர் அதை அணைக்க முயன்றனர் எனவும்—

எனினும் அது பலனளிக்காது போய்விட்டது எனவும் தெரிவிக்கப்பட்டது.

(உ-7-3)

## தற்கொலை...

[முதலாம் பக்கத் தொடர்]

முகாமுக்கு முன்பாகவுள்ள பிரதான வீதி போக்குவரத்துக்கு மூடப்பட்டுள்ளது.

மக்கள் போக்குவரத்துக்காக முகாமுக்கு ஊடாகப் புதிய பாதை ஒன்று திறக்கப்பட்டுள்ளது என்றும்—

அந்தப் பாதையூடாகச் செல்பவர்கள் கடும் சோதனைக்கு உள்ளாக்கப்படுவதாகவும் — தெரிவிக்கப்பட்டது.

தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் உயிரிழந்தமேஜர் கருணநாயக்க இந்த முகாமில் நீண்ட காலம் பணிபுரிந்தார் என்றும்—

இந்தப் பிரதேசம் [illegible]

என்றும்—தெரிவிக்கப்பட்டது. (உ-3-21)

# இஸ்ரேலின் வான் தாக்குதல்

இஸ்ரேல் விமானங்கள் நேற்று முன்தினம் இரவு தென் லெபனானில் உள்ள ஹிஸ்புல்லா தீவிரவாதிகளின் நிலைகள் மீது றொக்கட் தாக்குதலை மேற்கொண்டன.

தீவிரவாதிகள் நிலைகொண்டுள்ள மலைப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட இந்தத் தாக்குதலால் உயிர்ச்சேதங்கள் ஏற்படவில்லை.


# சுவிசேஷ ஆராதனைகள்

காலம்:- 1999 ஒகஸ்ட் 12 ஆம் திகதி வியாழன் மாலை முதல் 15 ஆம் திகதி ஞாயிறு வரை தினமும் மாலை 4-00 மணிக்கு

இடம்:- இலங்கை பெந்தெகொஸ்தே சபைச்சாலை 111, கண்டி வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

★ பிசாசின் பிடி, பாவம், மதுபானம், புகைத்தல், பில்லிசூனியம், கொலை இன்னும் தீயபழக்கவழக்கங்களிலிருந்து இயேசு விடுவிக்கிறார். சமாதானம் சந்தோஷம், பாவமன்னிப்பு தருகிறார்.

இலவச உட்பிரவேசம்!

வியாதியஸ்தருக்காக ஜெபிக்கப்படும்!!

யாவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

## இலங்கை பெந்தெகொஸ்தே சபை

111, கண்டி வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 021 - 2339 (68120)


இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 11-08-99 இல் அச்சிட்டுவெளியிடப்பெற்றது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org